இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic Weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna, Sri Lanka: Tel: 021-222 2378 Fax : 021 222 9041 -E-mail: editorkavalan@gmail.com ISSN 1391-7633

மலர்: 142 இதழ் : 09 திகதி: 27.05.2018 விலை : 20.00

# தூய ஆவியின் கொடைகளை நிறைவாகப் பெற்று கனிகொடுக்கும் மக்களாக வாழ்வோம்

## தூய ஆவியார் பெருவிழாவில் யாழ் ஆயர்





தூய ஆவியாரின் பெருவிழா மற்றும் திருவிழிப்பு ஆராதனை 19.05.2018 (சனிக்கிழமை) இரவு 7.00 மணி முதல் அதிகாலை வரை யாழ் புனித மடுத்தீனார் குருமட மைதானத்தில் இடம்பெற்றது.

இரவு 7.00 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமான இவ்விழாவில் முதல் திருப்பலி ஒப்புக்கொடுத்த யாழ் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தனது மறையுரையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தூய ஆவியாரின் கொடைகளை நிறைவாகப் பெற்று கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் நிறைந்த கனிகொடுக்கும் மக்களாக வாழவேண்டும் என அழைப்பு விடுத்த ஆயர மத வழிபாடுகள் வெறுமனே ஆடம்பர களியாட்ட விழாக்களாக மாறாது பக்தியுடன் கூடிய ஆன்மீகத்துக்கான விழாக்களாக அமைய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

திருவிழிப்பு ஆராதனைகளை அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள் சிறப்பான முறையில் நெறிப்படுத்தியதுடன், ஆன்மீக அருளுரைகளை அருட்பணி ஜெயசீலன் அடிகளார், அருட்பணி லோறன்ஸ் அடிகளார், மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி றெஜினோல்ட் அடிகளார் மற்றும் அவரது குழுவினர் வழங்கினர்.

அதிகாலையில் நடைபெற்ற தூய ஆவியார் பெருவிழாத் திருப்பலி யாழ் மறை மாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளாரால் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

### ஆயர் தின வாழ்த்துக்கள்



நல்லாயன் இயேசுவின்
நல்லருள் பெற்று
நாளும் நற்செய்திக்கு
நற்சான்று பகர்ந்து நின்று
மறைவாழ்விலும்
இறைபணியிலும்
சாதனைகள் பல இயற்றி
மறைமாவட்டத்தையும்
மக்கள் அனைவரையும்
வழிப்படுத்தும் வல்ல ஆயனே!
ஆயர் தினமதில்
வாழ்த்துகின்றோம்!
ஆண்டவன் அருளால்
ஆயத்துவம் சிறக்க வாழ்க..!

## அருட்பணி சறத்ஜீவன் அடிகளாரின் 9 ஆவது ஆண்டு நினைவுதினம்




முள்ளிவாய்க்கால் யுத்தத்தில் இன்னல்களை அனுபவித்த மக்களுக்கு மனிதநேயப் பணிபுரிந்து யுத்தத்தின் இறுதிநாளில் மரணித்த அருட்பணி சறத்ஜீவன் அடிகாரின் 9 ஆவது ஆண்டு நினைவுத் திருப்பலியும் அஞ்சலி நிகழ்வுகளும் உருத்திரபுரம் பற்றிமா அன்னை ஆலயத்தில் 18-05-2018 அன்றுகாலை 11.00 மணிக்கு நடைபெற்றது.

கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி யேசுதாஸ் அடிகளார் தலைமையில் குருக்கள் பலர் இணைந்து ஒப்புக்கொடுத்த இரங்கல் திருப்பலியில், மறையுரையாற்றிய அருட்பணி ஸ்ரீபன் அடிகளார் "கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால் ஒழிய அது பலன் தரமுடியாது" என்ற கிறிஸ்து இயேசுவின் வாக்கை மேற்கோள் காட்டி சறத்ஜீவன் அடிகளாரின் பணிகளை நினைவுகூர்ந்தார்.

திருப்பலியைத் தொடர்ந்து நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் எனப் பலரும் கலந்து கொண்டு சறத்ஜீவன் அடிகளாரின் தியாகத்தைப் போற்றியதுடன், முள்ளிவாய்க்காலில் மரணித்த அனைவரையும் நினைவு கூர்ந்தனர்.

இந்நிகழ்வுகளை உருத்திரபுரம் புனித பற்றிமா அன்னை ஆலய பங்குத்தந்தை அருட்பணி அமல்ராஜ் அடிகளாரும், பங்கு மக்களும் உணர்வுபூர்வமாக ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## செபமாலை மாதா துறவற சபையின் புதிய உயர் தலைவராக அருட்பணி ஜஸ்டின்ராஜ் செ.தா அடிகளார் நியமனம்



13.05.2018 அன்று இந்தியா பெங்களூரில் உள்ள செபமாலை மாதா துறவற சபையின் தலைமையகத்தில் இடம்பெற்ற 8 ஆவது பொது அமர்வில் செபமாலை மாதா துறவற சபையின் புதிய உயர் தலைவராக அருட்பணி ஜஸ்டின்ராஜ் செ.தா அடிகளார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அருட்பணி ஜஸ்டின்ராஜ் செ.தா அடிகளார் 1983 இல் செபமாலை மாதா துறவற சபையில் இணைந்து 1996 ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

## இது நாம் தியாகங்கள் செய்யவேண்டிய காலம்

### முள்ளிவாய்க்கால் நினைவுத் திருப்பலியில் குருமுதல்வர்



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினமாகிய 19.05.2018 அன்று மாலை யுத்தத்தில் மரணித்த மக்களுக்காக முள்ளிவாய்க்கால் புனித பவுல் ஆலயத்தில் நினைவுத் திருப்பலியை தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்த யாழ். மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்கலாநிதி. ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் தனது மறையுரையில் தமிழ் மக்களின் விடிவுக்காக தம்மையே தியாகம் செய்து பலியானவர்களை நாம் நினைவு கூர்ந்து மன்றாடும் போது அவர்களுடைய தியாகங்களுக்காக அவர்களுக்கும், இறைவனுக்கும் நன்றி கூறும் அதே வேளையில். அவர்களுடைய தியாகங்களிலே நாம்

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

## திருத்தந்தை ஆறாம் பவுல், ஆஸ்கார் றொமேரோ உட்பட ஆறு புதிய புனிதர்கள்

அருளாளர்கள் திருத்தந்தை ஆறாம் பவுல். ஆஸ்கார் றொமேரோ. பிரான்செஸ்கோ ஸ்பினெல்லி. வின்சென்சோ றொமானோ. மரிய கத்தரீனா காஸ்பர், இயேசுவின் தெரசின் நசரியா இஞ்ஞாசியா ஆகிய ஆறு பேரையும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எதிர்வரும் ஒக்டோபர் 14 ஆம் திகதி புனிதர்களாக அறிவிப்பார்.

19.05.2018 சனிக்கிழமை வத்திக்கானின் அப்போஸ்தலிக்க மாளிகையில் வழிபாட்டுடன் ஆரம்பித்த கர்தினால்கள் அவையில், இந்த ஆறு அருளாளர்களும் இளையோர் பற்றிய உலக ஆயர்கள் மாமன்றம் நடைபெறும் ஒக்டோபர் 14 ஆம் திகதி புனிதர்கள் என அறிவிக்கப் படுவார்கள் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தெரிவித்துள்ளார்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா:127:1)

# எமது எண்ணம்

## வாழ்வியல் கோலத்தில் தூய ஆவியின் பிரசன்னம்

தமிழர்களின் வாழ்வியல் கோலங்கள் இன்று பலராலும் பல கோணங்களிலும் விமர்சிக்கப்பட்டு வருவது யாவரும் அறிந்த உண்மையாகும். பெருமைக்குரிய விமர்சனங்களும் சிறுமைக்குரிய விமர்சனங்களும் இதில் அடங்கியிருக்கின்றது. பெருமைக்குரிய விமர்சனங்களைக் கண்டு பெருமிதம் கொள்ளும் அதேவேளை, சிறுமைக்குரிய விமர்சனங்கள் கண்டு வேதனையுற்று ஒடுங்கி ஒதுங்கி செல்ல வேண்டிய நிலையில் நாம் எங்கே போகிறோம் என எண்ணிப்பார்க்கவேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

எருசலேம் தேவாலயத்தைப் பார்த்து "உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்துகொண்டால் உனக்கு நலமாய் இருக்கும்" என்று அன்று இயேசு கண்ணீர் விட்டார். தனக்குப் பின்னே அழுதுகொண்டு வந்த எருசலேம் நகரப் பெண்களைப் பார்த்து "நீங்கள் எனக்காக அழவேண்டாம். உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" எனக் கூறினார். "வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே நீ பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய்" எனக் கூறியவரும் கிறிஸ்து இயேசுதான். லோத்தின் மனைவி, வரலாற்றில் எமக்கு நல்லதோர் படிப்பினை. இவையெல்லாம் எம்மை அச்சுறுத்துவதற்காக அல்லது பயமுறுத்துவதற்காக கூறப்பட்டவைகள் ஆகாது.

எமது வாழ்வியல் கோலங்கள் நெறிபிறழ்வுகளாக கலையும்போது இவற்றை நாங்கள் எச்சரிக்கைகளாக நோக்கவேண்டி உள்ளது. "நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்" என அன்று பாரதி குமுறியதைப் போல இன்றும் எம் சமூகத்தின் போக்குகளையும் நோக்குகளையும் பார்த்து குமுறவேண்டி உள்ளது.

போராட்ட வரலாற்றை காரணம் காட்டி எமது வாழ்வியலின் பல நல்ல பகுதிகளை, நல்ல பண்புகளை நாம் தொலைத்து வந்திருக்கின்றோம். எனினும், போராட்டம் மௌனித்த பின்னர் எமது ஒட்டுமொத்த வாழ்வியலும் சிதைந்து செல்லுகின்ற அபாயம் ஏற்பட்டுள்ளமை மனவருத்தத்தைத் தரும் ஓர் விடயமாகும். ஏற்கனவே போரினால் பாதிப்புற்ற நாம் மீண்டும் அறத்தை அழித்து, நெறிதவறி, மறைவாழ்வை மறந்து வாழத் தலைப்படுவோமானால் போரைவிட கொடூரமான அழிவுகளைச் சந்திக்க நேரிடும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் கிடையாது.

எமது வாழ்வியலில் முறைகேடுகளும், நெறிபிறழ்வுகளும் நிறைந்து வருகின்றமைக்கு யாது காரணம் என சிந்திப்போமாக இருந்தால் பல்வேறு காரணங்களை அடுக்கிக் கொண்டு போகலாம். அத்தகைய காரணங்கள் எல்லாவற்றுக்கும் மேலாக, கிறிஸ்தவர்களாகிய எமது மதிப்பீடு யாதெனில், பரிசுத்த அவியின் கொடைகளை நாம் உதறித்தள்ளிவிட்டு தூய ஆவியாருக்கு எமது வாழ்வில் முதன்மையிடம் கொடுக்காமையே எமது வாழ்வியல் கோலங்களில் ஏற்பட்ட அத்தனை அலங்கோலங்களுக்கும் காரணமாகும்.

தூய ஆவியார் எமக்கு பல நிறைவான கொடைகளை தரவல்லவர். அக்கொடைகளைப் பெற்று இனிமையான கனிகளை நாமும் சுவைத்து பிறருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டிய நிலையில் தூய ஆவியாரை நாம் புறக்கணிப்பதால் தீய ஆவியின் கொடைகளைப் பெற்று அதன் கனிகளைத் தான் நாம் இன்று அறுவடை செய்து வருகின்றோம்.

தூய ஆவியாரின் கொடைகளாக அன்பு, சமாதானம், தியாகம், பொறுமை ஒழுக்கம், கடவுள் பக்தி என பல்வேறு நற்கொடைகள் எம்மீது பொழியப்படுகின்றது. இவற்றின் கனிகள் எம்மை நிறைவான வாழ்விற்கு இட்டுச்செல்லும் வாழ்வு தரும் கனிகளாக காணப்படுகின்றன. ஆனால் நாம் கரும்பிருக்க இரும்பைக் கடிப்பதுபோன்று தீய ஆவியில் நாட்டம் கொண்டு தீமையின் பாதையில் காலடி பதித்து எமது வாழ்வையும் ஒட்டுமொத்த எம் சமூகத்தின் வாழ்வையும் குழிதோண்டிப் புதைத்து வருகின்றோம்.

அன்பிற்குப் பதில் ஆணவத்தையும் ,பொறுமைக்குப் பதில் பொறாமையையும், சமாதானத்திற்குப் பதில் அமைதியின்மைகளையும், நல்லொழுக்கங்களுக்குப் பதில் தீய ஒழுக்கங்களையும், பிறர் நலத்திற்குப் பதில் தன்னலத்தையும், அகிம்சைக்குப் பதில் இம்சையையும் எமது மனங்களில் விதைத்து எம் சமூகத்தை முட்செடிகள் விளையும் பூமியாக வரட்சியுறச் செய்து வருகின்றோம்.

கோழிக்கூட்டில் அடைத்து வைக்கப்பட்டிருந்த கோழிக் குஞ்சுகளை கீரி பிடித்து உண்ணுகின்றது என்பதற்காக வீட்டுக்காரன் தனது நாயை கோழிக்கூட்டிற்கு அருகில் கட்டி வைத்தான். அவன் வீட்டில் உள்ள அனைத்துப் பொருட்களையும் திருடர்கள் வந்து களவெடுத்துச் சென்றுவிட்டனர். இதுதான் தமிழர்களாகிய எமது இன்றைய யதார்த்தம். இன்றைய வாழ்வியல் கோலம். தூய ஆவியின் பிரசன்னத்தில் எமது வாழ்வியல் . கோலங்களை கண்களைக் கவரும் கோலங்களாக மாற்றி பசுமைப் புரட்சிக்கு வழி சமைப்போம்.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

# விண்ணேற்றத்தின் மனிதர்கள் நற்செய்தியை எடுத்துச் செல்பவர்கள்

## திருத்தந்தை பிரான்சிஸ்



வானத்தை அண்ணாந்து நோக்குவதையும், உடனடியாக இவ்வுலகை நோக்கி நம் பார்வையைத் திருப்பி இயேசு நம்மிடம் ஒப்படைத்துச் சென்றுள்ள பணிகளை ஏற்று நடத்த முன்வருவதையும், இயேசுவின் விண்ணேற்ற விழா நமக்கு நினைவூட்டுகின்றது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இயேசுவின் விண்ணேற்ற விழாச் செய்தியில் தெரிவித்தார்.

இயேசுவின் விண்ணேற்ற விழாவையொட்டி புனித பேதுரு வளாகத்தில் கூடியிருந்த விசுவாசிகளுக்கு அல்லேலூயா வாழ்த்தொலி உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் படிப்பறிவில்லாத ஒரு சிறு கூட்டத்தை நோக்கி இயேசு 'உலகெல்லாம் சென்று நற்செய்தியை அறிவியுங்கள்' எனக் கூறியது மக்களின் பலத்தை மட்டும் நம்பியல்ல மாறாக தூய ஆவியாரின் அருட்பொழிவையும் இணைத்தே என்றும் திருத்தந்தை கூறினார்.

இயேசுவின் அன்பையும் இரக்கத்தையும் உலகின் அனைத்து மூலைகளுக்கும்எடுத்துச் செல்ல வேண்டிய சீடர்களின் பணி பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது என்று கூறிய திருத்தந்தை திருமுழுக்கு பெற்ற ஒவ்வொருவரும் நற்செய்தியை அறிவிக்க வேண்டிய கடமையைக் கொண்டுள்ளனர் என்றும் எடுத்துரைத்தார்.

இயேசுவின் விண்ணேற்றத்தின் மனிதர்களாக நாம் வாழ்வது என்பது உலகின் இறுதி எல்லை வரை அவரின் நற்செய்தியை எடுத்துச் செல்வதாகும் என்று கூறிய திருத்தந்தை அவ்வாறு செல்லும் வழியில் ஏழைகளின் உருவில் இயேசுவே நம்மை எதிர்கொள்கிறார் எனவும் அவரை அடையாளம் கண்டு நம்பிக்கையின் உயிரூட்டமுடைய சான்றுகளாக நாம் விளங்கவேண்டும் எனவும் தெரிவித்தார்.

தன் அல்லேலூயா வாழ்த் தொலி உரையின் இறுதியில் உலக சமூகத்தொடர்பு நாள் சிறப்பிக்கப்படுவதையும் சுட்டிக்காட்டிய திருத்தந்தை போலிச் செய்திகளைப் புறந்தள்ளி அமைதியின் செய்தியாளர்களாக, சமூகத் தொடர்பாளர்களாகச் செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

அன்னையர் தினத்தையும் நினைவுகூர்ந்த திருத்தந்தை அனைத்து அன்னையருக்கும் நன்றியுரைப்பதோடு அவர்களுக்காக கரவொலி எழுப்பி பாராட்டு தெரிவிப்போம் எனவும் கேட்டுக் கொண்டார்.

# புதிய கர்தினால்களுள் ஆசியாவிற்கு மூவர்

ஜப்பான், ஈராக், பாகிஸ்தான் ஆகிய மூன்று ஆசிய நாடுகள் உட்பட ஏழு நாடுகளைச் சேர்ந்த 14 புதிய கர்தினால்களின் பெயர்களை அறிவித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஜூன் 29 ஆம் திகதியன்று இப்புதிய கர்தினால்களுக்கான நியமன நிகழ்வு இடம்பெறும் எனக் கூறினார்.

தூய ஆவியார் பெருவிழா வன்று வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தில் கூடியிருந்த விசுவாசிகளுக்கு அல்லேலூயா வாழ்த்தொலி உரை வழங்கிய பின்னர் இப்புதிய 14 கர்தினால்கள் பற்றி அறிவித்தார்.

ஜப்பான், ஈராக், பாகிஸ்தான், போர்த்துக்கல், பெரு, மடகாஸ்கர், இத்தாலி ஆகிய ஏழு நாடுகளைச் சேர்ந்த 14 புதிய கர்தினால்களின் பெயர்களை அறிவித்த திருத்தந்தை, இவர்கள் இப்பூமியில் அனைத்து மனிதருக்கும் கடவுளின் இரக்கமுள்ள அன்பை தொடர்ந்து அறிவிக் ஷ கும் திருஅவையின் உலகளாவியப்பண்பை வெளிப்படுத்துகின்றார்கள் என்று கூறினார்.

ஈராக் நாட்டின் கல்தேய வழிபாட்டுமுறை முதுபெரும் தந்தை லூயிஸ் இரஃபேல் முதலாம் சாக்கோ, பாகிஸ்தானின் காரச்சி பேராயர் ஜோசப் கூட்ஸ், ஜப்பானின் ஒசாகா பேராயர் தாமஸ் அக்குய்னாஸ் மான்யோ ஆகிய மூவர் ஆசியாவைச் சேர்ந்தவர்களாவர்.

திருப்பீட விசுவாசக் கோட்பாட்டு பேராயத் தலைவர் பேராயர் லூயில் லதாரியா, உரோம் மறைமாவட்ட பிரதிநிதி பேராயர் ஆஞ்சலோ தெ தொனாதிஸ், திருப்பீட செயலகத்தின்பிரதிநிதியும் மால்ட்டா இராணுவ பக்தி அமைப்பின் சிறப்பு பிரதிநிதியுமான ஜொவான்னி ஆஞ்சலோ பெச்சு, திருத்தந்தையின் பிறரன்புப் பணி அலுவலகத்தின் தலைவரான பேராயர் கோன்ராட் கிராஜேவிஸ்கி, போர்த்துக்கல் நாட்டு பாத்திமா பேராயர் அந்தோனியோ தோஸ் சாந்தோஸ் மார்தோ, அக்குய்லா பேராயர் Giuseppe Petrocchi, Xalapa முன்னாள் பேராயர் Sergio Obeso Rivera, Corocoro முன்னாள் ஆயர் Toribio Ticona Porco, கிளேரிசியன் சபையின் அருட்பணியாளர் Aquilino Bocos Merino ஆகியோர் புதிய கர்தினால்களாக நியமனம் பெறுகின்றனர்.




கூழாமுறிப்பு புனித சூசையப்பர் ஆலய திருநாள் 5.5.2018 சனிக்கிழமை நடைபெற்றது. அருட்பணி சகாயநாயகம் அடிகளார் தலைமையில் திருநாள் திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டது. ஆலயத் திருநாளை முன்னிட்டு ஆலய மக்களால் "ஞானசவுந்தரி" நாட்டுக்கூத்து மேடையேற்றப்பட்டது.

## கரம்பொன் புனித வேளாங்கன்னி ஆலய திருவிழா


கரம்பொன் புனித வேளாங்கன்னி ஆலய வருடாந்த திருவிழா 24.05.2018 வியாழக்கிழமை மாலை பொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் மாலை 4.00 மணிக்கு திருச்செபமாலையுடன் நவநாள் திருப்பலிகள் இடம்பெறும்.

01.06.2018 வெள்ளிக்கிழமை மாலை நற்கருணை ஆராதனையும், 02.06.2018 சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.



யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றியத்தினால் நடாத்தப்படவுள்ள குறும்படப்போட்டியில் கலந்து கொள்ளும் போட்டியாளர்களுக்கான கருத்தரங்கு 19.05.2018 இளையோர் ஆணைக்குழு இயக்குனர் தலைமையில் மறைமாவட்ட சமூக தொடர்பு ஆணைக்குழு அலுவலகத்தில் நடைபெற்றது.

# யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் கழக மாநாடு – 2018



**முகவுரை :**

ஒவ்வொரு அமைப்புக்களும் தமது அமைப்பு சார்ந்த செயற்பாடுகளை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தவும், தமது கடந்த காலப் பணிகளை ஒரு தடவை மீளாய்வு செய்யவும் முயற்சி எடுக்கின்ற ஒரு நடவடிக்கையே வருடாந்த ஒன்று கூடல் அல்லது வருடாந்த மாநாடாக அமைகின்றது. அத்துடன் எதிர்காலத் திட்டங்களுக்கான புதிய தீர்மானங்களை முன் வைக்கவும் மாநாட்டில் கலந்து கொள்வோரின் கருத்துக்களையும் உள்வாங்கி, சிறப்பாக செயற்படவும் இம்மாநாடு வழிகோலுகின்றது. அந்த வகையில் கடந்த 06.05.2018 அன்று யாழ் மறை மாவட்ட பொது நிலையினர் கழக மாநாடு பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெற்றது. இம்மாநாடு சம்பந்தமான கருத்துக்களையும் திட்டங்களையும் பற்றி இவ்வாக்கம் ஆராய்கின்றது.

**கழகத்தின் தோற்றம் :**

2009 ஆம் ஆண்டுக்கு முன் யாழ் மறைமாவட்டத்தில் பொதுநிலையினர் ஆணைக்குழு செயற்பட்டு வந்தது. இவ்வாணைக் குழுவுக்கு மேதகு ஆயரால் நியமிக்கப்படும் அருட்பணியாளர் ஒருவரே தலைவராக இருந்து வழிநடத்தி வந்ததுடன், குறிக்கப்பட்ட ஒரு சிலரே உறுப்பினர்களாகவும் இருந்து வந்தனர். 2009 ஆம் ஆண்டு இவ்வாணைக்குழுவின் இயக்குநராக அருட்பணி ம.வி.இ.இரவிச்சந்திரன் அடிகளார் நியமிக்கப்பட்டதுடன் பொது நிலை யினர் பணிகளை ஊக்குவிக்கவும் பரவலாக்கவும் ஆணைக்குழுவின் நேரடி வழிகாட்டலில் இயங்கக்கூடியதாக பொது நிலையினர் கழகத்தை உருவாக்கி, பொது நிலையினரே முழுமையாக நிர்வாகம் செய்யக்கூடியதாக மாற்றியமைத்தார். அத்துடன் இக்கழகத்திற்கான ஒரு காத்திரமான விதிகளையும் உருவாக்கி பங்கு மட்ட பொதுநிலையினர் விழிப்புணர்வுக்குழுவையும் மறைக்கோட்ட பொது நிலையினர் கழகத்தையும் ஏற்படுத்தி இன்னும் மெருகூட்டினார். 2009 ஆம் ஆண்டுக்குப் பின் 08 மாநாடுகளை இக்கழகம் வெற்றிகரமாக நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**புதிய இயக்குநரும் இவ்வருட மாநாடும் :**

இவ்வருடம் எமது பொது நிலையினர் கழகத்தின் புதிய இயக்குநராக அருட்பணி யோ.யோ.மவுலிஸ் அடிகள் மேதகு ஆயரால் நியமிக்கப்பட்டு முன்னாள் இயக்குநரிடமிருந்து பொறுப்பேற்றவுடன் வருடாந்த மாநாடு நடத்தவேண்டிய நிலை ஏற்பட்டது. அவரும் அனுபவம் வாய்ந்த கழக உறுப்பினர்களும் இணைந்து இம்மாநாட்டை முன்னெடுத்தனர். யாழ் மறைமாவட்டத்தின் ஒவ்வொரு பங்குகளிலுமிருந்து அழைக்கப்பட்ட ஐந்திற்குக் குறையாத உறுப்பினர்களும் மறை மாவட்ட பக்திச் சபைகள் அமைப்புக்கள் ஒவ்வொன்றிலுமிருந்து இரண்டு பிரதிநிதிகளும் விசேடமாக அழைக்கப்பட்ட தகைமை சான்றோரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை பிரதம அதிதியாகவும், கிளிநொச்சி மாவட்ட நீதவான் மதிப்பிற்குரிய உயர்திரு A.A.ஆனந்தராஜா அவர்கள் சிறப்பு அதிதியாகவும் மற்றும் குருமுதல்வர், பொது நிலையினர் கழக மறைக்கோட்ட



இயக்கு நர்களும், பல அருட்பணியாளர்களும் கலந்து சிறப்பித்தனர்.

**திருப்பலியோடு ஆரம்பம்**

06.05.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் தூய மரியன்னை பேராலயத்தில் ஆயர் தலைமையில் முன்னாள் இயக்குநர் இந்நாள் இய்க்குனர் ஆயரின் செயலர் ஆகியோர் ஒப்புக்கொடுத்த கூட்டுத்திருப்பலியோடு மாநாடு ஆரம்ப

**இ.அ.அமலரட்ணம்**

மானது. தொடர்ந்து பாதுகாவலன் மண்டப முன்றலில் திருத்தந்தையின் கொடியை ஆயரும், கழகக் கொடியை கழகத் தலைவர் திரு.கிருசாந்து றொபேட் அவர்களும் ஏற்றி வைத்தனர். தலைவர் தலைமையில் மாநாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. கடந்த வருடத்திற்கான மறைக்கோட்டங்களின் செயற்பாட்டு அறிக்கையும், மறை மாவட்டக் கழகத்தின் செயற்பாட்டு அறிக்கை மற்றும் நிதிக்கூற்று என்பன சமர்ப்பிக்கப்பட்டன. பாரம்பரிய கலைகளைப் பாதுகாக்கும் நோக்கோடு பொதுநிலையினர் கழகத்தால் நடத்தப்பட்ட வில்லுப்பாட்டு மற்றும் கிராமிய நடனப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கு மேதகு ஆயர் பரிசில் வழங்கிக் கௌரவித்தார்.

**விருந்தினர்களின் உரைகள்:**

எமது முன்னாள் இயக்குநர் ம.வி.இ.இரவிச்சந்திரன் அடிகள் இன்நாள் இயக்குனர் அருட்பணி யோ.யோ. மவுலிஸ் அடிகள், குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகள் ஆகியோரின் உரைகள் ஆழமான கருத்துக்கள் கொண்டதாக அமைந்திருந்தன. "திருச்சபையில் பொதுநிலையினரின் தொகைக்கும் விகிதாசாரத்திற்கும் ஏற்ப அவர்களின் பணிகள் இன்னும் அதிகரிக்கப்படவேண்டும் என்றும் கழகத்தின் செயற்பாடுகளைக் கண்டு திருச்சபை அச்சம் கொள்ள வேண்டும் என்றும் உப்பாக ஒளியாக புளிக்காரமாக சாட்சியம் பகரவேண்டும் என்ற சாரப்பட அமைந்திருந்தன. பிரதம அதிதிக்கான உரையை யாழ் ஆயர் வழங்குகையில் 2ம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்னிருந்த செபித்தல், பணம் கொடுத்தல், கீழ்ப்படிதல் என்ற நிலையே இன்றும் காணப்படுகின்றது என்றும் அந்நிலை மாறி, பங்கேற்கும் திருச்சபையாகப் பொதுநிலையினர் எழுச்சி பெறுவதோடு எல்லாத் துறைகளிலும் பொறுப்புக்களைத் துணிவோடு ஏற்றுக் கொண்டு செயலாற்ற வேண்டுமென்று கூறியதோடு, 2ம் வத்திக்கான் சங்கத்திற்குப்பின் பொதுநிலையினருக்குப் பல உன்னதமான உரிமைகள் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அதில் மிக உன்னதமானது நற்கருணைப் பணியாளர்களாகப் பணிபுரிவது என்றும் குறிப்பிட்டார்.

**மாநாட்டின் சிறப்புரை:**

உலகத் திருச்சபை இளையோர் ஆண்டைக் கடைப்பிடித்து **"இறைதிட்டம் தேடும் இளையோர் பயணம்"** என்னும் கருப்பொருளில் சிந்திக்கும் இவ்வாண்டில் இம்மாநாட்டிற்கான கருப்பொருளும் **"கிறிஸ்துவின் வழிநின்று இளையோரை உருவாக்குவோம்"** என்பதாக அமைந்திருந்தது. இம்மாநாட்டுக்கான சிறப்புரையாற்ற அழைக்கப்பட்டிருந்த மதிப்பிற்குரிய கிளிநொச்சி மாவட்ட நீதவான் உயர்திரு A.A.ஆனந்தராஜா அவர்கள் **"இளையோரின் உருவாக்கத்தில் கிறிஸ்தவ பெற்றோர்களின் பங்களிப்பு"** என்னும் காலத்தின் தேவைக்கேற்ற தலைப்பில் உரையினை வழங்கியிருந்தார். தன்னுடைய சொந்த வாழ்வின் அனுபவங்களையும் த்னது நீதித்துறை பணி சார்ந்த அனுபவங்களையும் கோடிட்டுக்காட்டி, பெற்றோர்கள் தங்களுடைய முரண்பாடுகளையும் பிரச்சினைகளையும் தமது பிள்ளைகளுக்குக் கொடுக்காமல் உண்மையான கத்தோலிக்க விழுமியம் மற்றும் மதிப்பீடுகள் சார்ந்த அனுபவங்களையும் வாழ்க்கை முறைகளையும் கொடுக்க வேண்டுமென்றும் கூறியதோடு, எதையும் பிள்ளைகளுக்குத் திணிக்காமல் அவர்களின் ஆற்றல் திறமைகளுக்கு ஏற்ப உருவாக்கவேண்டும் என்றும் ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

**மறைக்கோட்ட செயற்குழுத் தெரிவு:**

ஒவ்வொரு மறைக்கோட்டத்திற்குமான தொடர்ந்து வருகின்ற இரண்டு வருடங்களுக்கான மறைக்கோட்ட செயற்குழுத் தெரிவு இடம்பெற்றது. .இதனை மறைக்கோட்ட இயக்கு நர்களும் கழக வளவாளர்களும் நெறிப்படுத்தினர். தொடர்ந்து போட்டியில் பங்குபற்றி முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட கிராமிய நடனம், வில்லுப்பாட்டு நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டன. இறுதியாக பொதுநிலையினர் கழகக் கீதத்துடன் மாநாடு நிறைவுபெற்றது.

**முடிவாக:**

இம்மாநாட்டில் பங்குபற்றியவர்கள் தமது பங்குகளைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றார்கள். இங்கு உரைகள் வழியாகப் பெற்றுக்கொண்ட பொதுநிலை சீடத்துவம் சார்ந்த பணிக்கான கருத்துக்களை தமது வாழ்விலும் கடைப்பிடிப்பதோடு பங்குத் திருச்சபைக்குள்ளும் ஊடுருவச் செய்யவேண்டும். வெறுமனே இம் மாநாட்டில் பங்குபற்றி பார்வையாளர்களாக இருந்துவிட்டுப் போனால் மாநாட்டின் நோக்கமும் குறிக்கோளும் அர்த்தமற்றுப் போய்விடும்.

எனவே ஒவ்வொருவரும் எழுச்சி கொள்ளவேண்டும். அத்துடன் குடும்பத்திலும் பங்குத் திருச்சபையிலும் சமூகத்திலும் கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ்ந்து ஆண்டவன் இயேசுவின் இறையாட்சிக் கனவை நனவாக்க சீடத்துவ வாழ்வை முன்னெடுக்க வேண்டும். எனவே செபத்திலே நிலைத்திருப்போம் எழுச்சி கொண்டு பணியாற்றுவோம் புதுயுகம் படைப்போம்.

## மே மாதம் பேசுகின்றது...

கிறிஸ்தவர்களாகிய எமக்கு மே மாதம் முதன்மை வாய்ந்த பலவிழாக்களைத் தந்துள்ளது. இயேசுவின் விண்ணேற்றப் பெருவிழா, அன்னை மரியாளின் வணக்க மாதம், தூய ஆவியாரின் பெருவிழா, மூவொரு இறைவன் பெருவிழா, அன்னை மரியாள் எலிசபெத்தம்மாளைச் சந்தித்த மகிழ்வின் தினம் என்பவற்றை இம்மாதத்தில் நாம் நினைவுகூருகின்றோம்.

இவ்விழாக்கள் வெறுமனே சடங்கு சம்பிரதாயத்திற்காக நடைபெறுகின்ற விழாக்களாக ஏதோ வந்து போகும் நிகழ்வுகளாக எம்மால் நினைவுகூரப்படுமானால் அவை அனைத்தும் அர்த்தத்தை இழந்துவிடும். இவ் ஒவ்வொரு விழாவையும் நாம் கிறிஸ்தவ வாழ்வியல் கண்ணோட்டத்தில் அணுகி அதன் இறையியல் கருத்துக்களை, மறை உண்மைகளை ஆழமாகத் தியானித்து அதனை எம் வாழ்வில் நடைமுறைப்படுத்தும் போதுதான். இவ்விழாக்கள் அல்லது தினங்கள் எமது வாழ்வில் அர்த்தத்தைப் பெற்றுக்கொள்கின்றது.

இயேசுவின் விண்ணேற்றம் என்பது அவரை இறைவனாக ஏற்றுக்கொண்டு அவரில் ஆழ்ந்த விசுவாசத்தை நாம்கொள்வதற்கு வழிசெய்கின்றது. இன்று கடவுள் இருக்கிறாரா என்ற வினாவிற்கும், மறு உலக வாழ்வு தொடர்பான ஐயத்திற்கும் பதில் தான் இயேசுவின் விண்ணேற்றம்.

அன்னை மரியாள் திரு அவையின் தாய். பாத்திமா நகரில் அவர் காட்சிகொடுத்து கூறியவற்றை மனதில் இருத்தி அன்னை மரியாவின் பரிந்துரை வழியாக இறைபேரின்பத்தை நாம் அனுபவிக்கவேண்டும். உலகின் தீமைகள் அகல பாவங்கள் விலக தினமும் நாம் செபிக்கவேண்டும் என்பதே வணக்கமாதத்தின் அழைப்பாகும்.

தூய ஆவியார் எமக்குத் துணையாக நின்று, வாழ்க்கையின் அத்தனை படிகளிலும் எமக்கு வழிகாட்ட வல்லவராக இருக்கின்றார். அன்பு, பொறுமை, தியாகம் போன்ற தூய ஆவியாரின் கனிகளை நிறைவாகப் பெற்றுக்கொண்டவர்கள் மாத்திரமே இவ்வுலகில் நிறைவான வாழ்வை வாழ முடியும். இதனைத்தான் தூய ஆவியானவரின் பெருவிழா கூறுகின்றது.

மூவொரு இறைவனின் பெருவிழா இறைவன் தந்தை, மகன், தூய ஆவியென மூன்று ஆட்களாக இருந்தாலும் இம்மூவரும் ஒரே இறைதன்மையைக் கொண்டவர்கள். தனித்துவங்களை மதித்து சமத்துவம், சமாதானம் என்பவற்றை நாம் பேணி வாழவேண்டும்என்பதையே மூவொரு இறைவனின் பெருவிழா நமக்கு உணர்த்துகின்றது.

அன்னை மரியாள் எலிசபெத்தம்மாளைச் சந்தித்துதன் வாழ்த்துக்களை வழங்குகின்றாள். எலிசபெத்தம்மாளும் அன்னை மரியாளின் வாழ்த்துதலைப் பெற்று பேருவகை அடைகின்றாள். கிறிஸ்தவர்களாகிய நாம் பிறரை வசைபாடாது வாழ்த்தி, அவர்களின வாழ்க்கையில் தடைக்கற்களாக அல்ல படிக்கற்களாக வாழவேண்டும் என்பதையே இந்நிகழ்வு குறித்து நிற்கிறது.

# இளைஞர்கள் யுவதிகளை சமூகப் பணிக்கு தயார் செய்வது காலத்தின் தேவையாகும்

**"சேஞ்ச்" வதிவிடப்பயிற்சி நிறைவில் அன்ரனி கலீஸியஸ்**



ZOA நிறுவனத்தின் அனுசரணையுடன் **'சேஞ்ச்' (மாற்றம்)** நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட உள சமூக நண்பர்களுக்கான 10 நாள் வதிவிடப் பயிற்சிப் பட்டறையின் சான்றிதழ் வழங்கும் வைபவம் 12.05.2018 அன்று யாழ். கியூடெக் நிறுவன அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட உளவளத்துணை இணைப்பாளர் ந. உதயகுமார் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக உளநல மருத்துவர் சிவதாஸ். ZOA நிறுவனத்தின் தேசிய இணைப்பாளர் அன்ரனி கலீசியஸ், வசந்தக இயக்குநர் அருட்பணி . டேமியன் அடிகளார், தொடர்பக இயக்குநர் அருட்கலாநிதி டே.வின்சன் பற்றிக் அடிகளார் கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்பணி இயூஜின் பிரான்சிஸ் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

**அருட்கலாநிதி டே.வின்சன் பற்றிக் அடிகளாரின் உரை :**

இது 10 நாள் அறுவடை நேரம். மிகவும் மகிழ்ச்சியான தருணம். வயது எல்லை தாண்டி பயிற்சி பெற்ற அனைவரும் சமூக சேவையில் ஈடுபடவும் சமூகத்தில் பெரிய மாற்றத்துக்கான விதையாகவும் உருவாகவே இங்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர். இப்பயிற்சிப் பட்டறைக்கு நிதியுதவி வழங்கிய ZOA நிறுவனத்திற்கும், பயிற்றுவிப்பாளர்களுக்கும், பயிற்சிப்பட்டறைக்கு உறுதுணையாக இருந்து பணியாற்றிய சமூக சீராளர்கள் ஜோசப்பாலா மற்றும் அல்பேட் பஸ்ரியன் ஆகியோருக்கு தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

**உளமருத்துவர் சிவதாஸ் அவர்களின் உரை:**



சமூகப் பணியாளராகிய நாங்கள் ஒரு சில விடயங்களைக் கடந்து விட்டால் அல்லது கட்க்க உதவி புரிந்தால் சமூகம் பிரச்சினைகளிலிருந்து தப்பித்து கொள்ளும் என என்னுகின்றோம். ஆனால், அமைப்பு ரீதியான மாற்றம் ஒன்று ஏற்படாதவரை பிரச்சினைகளிலிருந்து விடுபடுவது சாத்தியமற்றது. இதுவே தற்போதைய உள சமூக நிலைமையாகும். சின்னச் சின்ன விடயங்களைச் செய்து நம்மைநாமே திருப்திப்படுத்திக் கொள்ளலாமே தவிர அமைப்பு ரீதியாக முழுமையான மாற்றம் ஒன்று ஏற்படாதவரை பெரிய அளவில் மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது என்பது எனது கருத்து. எங்களது இளைஞர், யுவதிகளை சமூகப் பணிக்கு தயார் செய்வது அவசியம் ஏனெனில் அவர்களுக்கே எமது நிலையும் எம்மவர்களின் பிரச்சினைகளை தாங்கும் மனஉறுதியும் அதிகம். இந்தப் பயிற்சி நல்ல மாற்றம் அல்லது தொடக்கம். இதிலிருந்து மாணவர்களாகிய நீங்கள் அதிகம் கற்றுக் கொள்ள வேண்டும். பல்வேறு கோணங்களில் சிந்திக்க இந்தப் பயிற்சி உங்களுக்கு உதவி செய்யலாம். நீங்கள் வருங்காலத்தில் சமூகப் பணியினை மேற்கொள்ளத் தொடங்கும்போது பல இடர்களைச் சந்திக்க நேரலாம். அதனால் மனமுடைந்து போகாது தொடர்ந்து பணியாற்றுங்கள். நாங்கள் செல்ல வேண்டிய தூரம் மிக அதிகம் என்பதை மட்டும் மனதில் வையுங்கள். இந்தப் பயிற்சிப்பட்டறையை நடாத்திய அருட்கலாநிதி டே.வின்சன் பற்றிக் அடிகளாருக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

**ZOA நிறுவனத்தின் தேசிய இணைப்பாளர் அன்ரனி கலீஸியஸ் அவர்களின் உரை:**



ZOA நிறுவனம் கடந்த 2005 ஆம் ஆண்டிலிருந்து வடக்கிலும் கிழக்கிலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்குரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. எவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கலாம் என ஒவ்வொரு மாவட்டங்களிலும் கலந்துரையாடும்போதும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் மதுபோதை மற்றும் போதைப் பாவனை மூலகாரணமாக அல்லது முக்கிய காரணியாக இருப்பதாக தெரிவிக்கிறார்கள்.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் மதுபோதைப் பாவனையால் பாதிக்கப்பட்டு குடும்ப வன்முறைக்கு உள்ளான ஏராளமான குடும்பங்களை சந்திக்க நேரிட்டது. அவர்களுக்கான பணியை அருட்கலாநிதி டே.வின்சன் பற்றிக் அடிகளாருடன் இணைந்து 'சேஞ்ச்' நிறுவனத்தினூடாக செய்து வருகிறோம். அந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு செயல்திட்டமாகவே இந்த உள சமூக நண்பர்களுக்கான 10 நாள் வதிவிடப் பயிற்சிப் பட்டறை மேற்கொள்ளப்பட்டது. இப்போதைய காலகட்டத்தில் மக்களுடைய தேவைகளை நிறைவு செய்வதற்கு தன்னார்வத் தொண்டர்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றனர். அவர்களுக்குள்ளும் இந்த 19 பேர் பயிற்சிகளைப் பெற்று தங்களுடைய கிராமத்துக்குப்போய் தம்மைப் பலப்படுத்திக் கொள்வதோடு மட்டுமல்லாமல் இதைப் பயன்படுத்தி கிராமத்தில் பாதிக்கப்பட்டவர்களையும் பலப்படுத்தி அவர்களை அழிவுப்பாதையில் இருந்து பாதுகாக்க முன்வருவது சாதாரண காரியமல்ல. அவர்கள் பாராட்டுக்குரியவர்கள். மாற்றம் ஒவ்வொருவருக்குள்ளும் இருந்து வர வேண்டும். அப்போதுதான் அது நிலையாக இருக்கும். பயிற்சி பெற்ற உள சமூக நண்பர்களாகிய நீங்கள் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருப்பீர்கள் என நான் எதிர்பார்க்கின்றேன். முடிந்தவரை பிரச்சனைகளுக்கு உள்ளானவர்களை அதிலிருந்து வெளிக்கொணர உதவ வேண்டும் அதற்கு எமது நிறுவனம் தொடர்ந்து உதவி புரியும் என்றார்.

**யாழ். உளவளத்துணை இணைப்பாளர் ந. உதயகுமார் அவர்களின் உரை:**



சமூக மட்டத்தில் பல்வேறு விதமான உள சமூகப் பிரச்சினைகள் எம்மத்தியில் காணப்படுகின்றன. மாறிக்கொண்டிருக்கும் சூழலும் தொழில்நுட்பமும் உளவியல் பிரச்சினைகளின் தாக்கத்தை அதிகரித்த வண்ணம் உள்ளன. எமது மாவட்டத்தில் பல்வேறுபட்ட நிறுவனங்கள், அமைப்புகள், குழுக்கள் பலருக்கும் பயிற்சிகளை வழங்கியிருந்த போதிலும் வளவாளர் பற்றாக்குறை தொடர்ந்து காணப்படுவதுடன் அவர்கள் உளவள சேவையில் தொழில் ரீதியாக ஈடுபடுபடுவது மிகவும் குறைவாகவே உள்ளது. எம்மைப் பொறுத்தவரையில் கற்றலைவிட செயற்பாடுதான் முக்கியமானது.

எனவே பிரச்சினைகள் வந்தபின்பு அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதை விடுத்து அதை வருமுன் தடுப்பதே சிறந்ததாகும். இந்த 19 இளைஞர்களும் யுவதிகளும் பயிற்சியைப் பெற்று தமது சேவையை மக்கள் மத்தியில் புரிவதன் மூலம் உளரீதியான ஆற்றுப்படுத்தலை மேற்கொள்ள முடியும். தொடர்ந்தும் இந்தத் துறையில் பயிற்சி பெற்று மக்களுக்காக செயற்படுவார்கள் என நம்புகிறேன்.

இந்தப் பயிற்சியை நடாத்திய அருட்கலாநிதி டே.வின்சன் பற்றிக் அடிகளாருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அருட்தந்தை யாழ். மாவட்டச் செயலகத்துடன் இணைந்து தொடர்ந்தும் மதுபோதைக்கு எதிரான நடவடிக்கைகளில் தன்னார்வத் தொண்டில் ஈடுபட்டு வருகிறார், அவர் எமக்குக் கிடைத்திருக்கும் மிகச்சிறந்த வளமாகக் காணப்படுகிறார் என்றார்.

தொகுப்பு: **அல்பேட் பஸ்ரியன்**
பல்கலைச் சீராளன்

"சேஞ்ச்" (மாற்றம்) நிறுவனம் போதைவஸ்து பாவனையாளர்களின் புனர்வாழ்வுக்கு பணியாற்றும் வழிகாட்டும் நிறுவனமாகும். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் ZOA நிறுவனத்தின் அனுசரணையுடன் கடந்த மூன்று ஆண்டுகளாக செயற்பட்டு வரும் இந்நிறுவனத்தின் இயக்குநராக அருட்கலாநிதி டே.வின்சன் பற்றிக் (அமதி) அடிகளார் அரும்பணியாற்றி வருகின்றார். போதைப்பொருள் பாவனைக்குட்பட்டவர்களை உளவள ஆற்றுகைக்கு உட்படுத்தி மருத்துவச் சிகிச்சை மூலம் அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதே இந்நிறுவனத்தின் பிரதான நோக்கமாகும். இதுவரை நூற்றுக்கும் மேற்பட்டோர் இந்நிறுவனத்தினால் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு நற்பிரஜைகளாக சமூகத்தில் வலம் வருகின்றனர். இளைஞர் யுவதிகள் பலர் தன்னார்வத் தொண்டர்களாக இந்நிறுவனத்தில் இணைந்து பணியாற்றி வரும் நிலையில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்களும் இணைந்து செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



"சேஞ்ச்" நிறுவனத்தில் தன்னார்வத் தொண்டராக பணியாற்றி பல்வேறு உளசமூகப் பணிகளில் ஒன்றிணைந்து செயற்படும் அல்பேட் பஸ்ரியன் அவர்களுக்கு அருட்கலாநிதி டே. வின்சன் பற்றிக் அமதி அடிகளார் 'பல்கலைச் சீராளன்' எனும் பட்டமளித்து பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.



## காவலன் கலசம்

# தோல்வி கொண்ட வெற்றியும் வெற்றி கொண்ட தோல்வியும்:

## மசாடாவும் முள்ளிவாய்க்காலும்

**முகவுரை:**

எவ்வாறு வெற்றியில் தேல்வியும் தோல்வியில் வெற்றியும் சாத்தியமாகும்? என்று எண்ணத் தோன்றுகின்றதா? அது சாத்தியமே. அதுதானே கிறிஸ்தவம். யூதருக்கு அவமானத்தின் சின்னமாகவும், பிற இனத்தவருக்கு மடமையாகவும் இருக்கும் சிலுவை கிறிஸ்தவர்களுக்கு எவ்வாறு வெற்றியின் சின்னமாகவும், மீட்பாகவும் அமைந்ததோ அவ்வாறு தான் இதுவும் (காண்.1கொரி.1:18).

இக்கருத்தைத் தெரிவிக்கும் போது இதேமாதிரியான ஒரு கருத்தை ஒரு முறை எம் மண்ணின் எழுத்தாளர் ஒருவர் தெளிவுபடுத்தும்போது பாவித்த உவமானம் ஒன்று இங்கே ஞாபகம் வருகின்றது; "வெற்றியின் கிரீடம் முட்களால் ஆனது" என்று இயேசுவின் பாடுபட்ட சுரூபத்தை சுட்டிக்காட்டினார். அது எவ்வளவு ஆழமான கருத்தைப் பேசி நிற்கின்றது பாருங்கள்.

**1. மண்டியிடாத மசாடா (MASADA)**

**1.1 மசாடாவின் புவிவியல் அமைவு**

மசாடா என்பது ஓர் கோட்டை. இது யூதேய பாலை நிலத்தில் தனித்து அமைந்துள்ள மலைப் பிரதேசத்தின் மேற்கு முனையின் உச்சியில் அமைந்துள்ளது. இதன் பின்புறமாகவே சாக்கடல் நிலைகொண்டுள்ளது. இம் மலையின் கிழக்குப் பக்கம் செங்குத்தான சரிவைக் கொண்டுள்ளது. இச் செங்குத்தான சரிவானது சாக்கடலின் மேற்பரப்பிலிருந்து கிட்டத்தட்ட 450 மீற்றர் உயரம் கொண்டுள்ளது. இதன் மேற்கு முனையானது நிலப்பரப்பிலிருந்து கிட்டத்தட்ட 100 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ளது. இதன் புவியியல் அமைவாவது இயல்பாகவே யாரும் எளிதில் இம்மலையின் உச்சியை அடைய முடியாத அளவிற்கு மிகவும் கடினமானது என்பது குறிப்பிடத்தக்கது.

**1.2 மசாடாவின் வரலாறு**

மசாடாவின் வரலாற்றினை அறிந்துகொள்ள யுசேப்புஸ் பிளாபியுஸ் (Josephus Flavius) எனும் வரலாற்றாசிரியர் எழுதிய " The Jewish War" எனும் நூல் ஒன்றே ஆதாரமாக உள்ளது.

யுசேப்புஸ் பிளாபியுஸ் கிறிஸ்துவுக்குப் பின் 66 இல் இஸ்ராயேலில் இயங்கி வந்த யூத விடுதலைக் குழுக்களின் ஓர் குழுவின் தலைவனாகத் திகழ்ந்தவர். இவர் ஓர் வரலாற்றாசிரியர். இவரது குறிப்பின்படி மசாடா என்னும் கோட்டை கி.மு. 37 இற்கும் கி.மு. 31 இற்கும் இடையில் மகா ஏரோதினால் கட்டப்பட்டது என்று அறிகின்றோம். மகா ஏரோதின் இறப்பின் பின் உரோமையரின் அடக்குமுறையை விரும்பாத, யூத மதத்தை செவ்வனே பின்பற்றும் யூத மக்கள் கூட்டமொன்று மசாடாவை தங்கள் வாழ்விடமாகத் தேர்ந்து கொண்டனர்.

இஸ்ராயேலில் ஆங்காங்கே இயங்கி வந்த யூத விடுதலைக் குழுக்கள் அனைத்தையும் உரோமர்கள் அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அனைத்துக் குழுக்களும் விரட்டப்பட்டு இறுதியில் எருசலேமும் உரோமையர்களால் அழிக்கப்பட்டது. எருசலேமின் வீழ்ச்சியின் பின்னர் அங்கிருந்து கி.பி. 70 இல் யூத விடுதலைக் குழுவொன்று தங்கள் குடும்பங்கள், இனத்தவர்களுடன் தப்பிச் சென்று மசாடாவில் வாழ்ந்த யூதர்களுடன் இணைந்து கொண்டனர். இவர்கள் அனைவரும மசாடாவைத் தங்கள் தளமாகக் கொண்டு உரோமையர்களின் அடக்குமுறைக்கு எதிராகப் போராடி வந்தனர்.

**1.3 உரோமையர்களின் முற்றுகை**

எவ்வாறு ஈழவிடுதலைப் பேராரிலே முள்ளிவாய்க்கால் இறுதி இடமாக அமைந்ததோ அவ்வாறே யூதர்களுக்கும் மசாடா இறுதி இடமாகவே அமைந்தது. எவ்வாறு வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்து போராளிகளும், மக்களும் முள்ளிவாய்க்காலுக்குள் முடக்கப்பட்டனரோ அவ்வாறே யூத குழுக்களும், மக்களும் மசாடாவுக்குள் முடக்கப்பட்டனர்.

கி.பி. 73 இல் உரோமை ஆளுநன் பிளேவியூஸ் சில்வா (Flavius Silva) என்பவனின் தலைமையில்உரோமைப் படை மசாடாவை கைப்பற்றும் நோக்குடன் மசாடாவின் மலையடி வாரத்தில் முகாம்கள் அமைத்து முற்றுகையிட்டனர். தாக்குதல் ஆரம்பமானது முள்ளிவாய்க்கால் போன்றே மசாடாவும் தப்பிச் செல்ல வழியேதுமின்றித் தவித்தது.


மசாடா


வன்னி

முள்ளிவாய்க்காலுக்கு நடந்தது போலவே உணவு, தண்ணீர் உட்பட அனைத்தும் தடைசெய்யப்பட்டன. மசாடா வாழ் யூதர்கள் வலுவிழக்கச் செய்யப்பட்டனர். அதே வேளை உரோமைப் படையினர் மசாடாவின் மதிலின் ஒருபகு தியை உடைப்பதில் ஓரளவு வெற்றியும் கண்டனர். இந்நிலையில் மசாடா வாழ் யூதர்கள் என்ன செய்தார்கள்?

மசாடா வாழ் யூதர்களின் தலைவன் எலாசார்பென்யாயீர் (Elazar ben Yair) தன் மக்களை ஒன்றுகூட்டினார். ஒன்றுகூட்டிய மக்களுக்கு அவன் ஆற்றிய இறுதியுரை வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. அவ்வுரை பின்வருமாறு.

"நாம் உரோமையர்களுக்கு அடிமை வாழ்வு வாழப் போவதில்லை என்று சபதம் பூண்ட மக்கள் கூட்டம். யாவே (Yahweh) ஒருவரைத் தவிர வேறு தெய்வங்களை வழிபட மாட்டோம் என்பதில் மிக உறுதியாக உள்ளவர்கள் நாங்கள். யாவே ஒருவரே மனித இனத்தின் உண்மைக் கடவுள். இதோ! இப்போது நாம் எம் கொள்கைகளை உறுதி செய்து நிரூபிக்கவேண்டிய நேரம் வந்துவிட்டது. உரோமையர்களுக்கு எதிராகப் போராடிய. முதல் போராளிகளும் நாமே. அவர்களுடன் போராடி மடியும் இறுதிப் போராளிகளும் நாமே. எனவே இந்த சுதந்திர தேசத்தில் உரோமையர்களுக்கு அடிமைகளாக வாழ்வதை விட வீரமுள்ள யூதர்களாய் சுதந்திரமாய் சாவது மேலானது. உரோமையர்களின் கைகளால் நாம் மடிவதை விட எம் கைகளாலேயே எம் சாவை நாம் அணைத்துக்கொள்வோம்" எனவே அவர்கள் அனைவரும் தங்கள் வாள்கள் கொண்டு தங்களையே மாய்த்துக்கொண்டனர் என்கின்றது யுசேப்புஸ் பிளாவியுசினுடைய வரலாற்றுக் குறிப்பு.

**1.4 உரோமையரின் அவமானமும் யூதரின் வீரமும்**

உரோமையர்கள் மசாடா வைக் கைப்பற்றியபோது மசாடாவில் வாழ்ந்த யூதர்கள் எவரும் உயிருடன் இருக்கவில்லை. உரோமையர்களுக்கோ மசாடா அன்று ஓர் மரணக்கோட்டையாகவே காட்சி தந்தது. எவ்வாறு முள்ளிவாய்க்கால் மே 18 இல் காட்சியளித்ததோ அவ்வாறே மசாடாவும் அன்று சுடுகாடாய் மாறியது. உரோமையர்களால் மசாடாவின் மதில்களை மட்டும் தகர்க்க முடிந்ததே ஒழிய மசாடா வாழ் யூதர்களின் மன உறுதியையும் அவர்களது கொள்கைகளையும் அவர்களால் தகர்க்க முடியவில்லை என்பதே இங்குள்ள உண்மை.

இவ்வெற்றியானது உரோமையர்களுக்கு ஓர் "அவமான வெற்றி" . (Shameful Victory) என்றே பார்க்கப்படுகின்றது. இங்கே யூதர்களின் சாவு அது "புகழ்மிக்க சாவு" (Glorious Death) என்றே நோக்கப்படுகின்றது.

மசாடா இன்று உரோமையர்களுக்கு அவமானத்தின் அடையாளமாகவும் யூதர்களுக்கு அது வெற்றியின், வீரத்தின் இருப்பிடமாகவும் காட்சியளிக்கின்றது. இஸ்ராயேல் இன்றும் பெருமையுடன் மசாடாவின் வீரத்தையும், தன் மானத்தையும் நினைவுகூருகிறது. கிட்டத்தட்ட 2000 ஆண்டுகள் கடந்து சென்றும்

**அருட்பணி T.ரவிராஜ்**

இன்னமும் மசாடா யூதர்களின் நினைவுகளிலிருந்து விடுபடவில்லை. மாறாக யூதர்கள் தாம் தன்மானத்துடன் தனித்துவமாக சுதந்திர தேசத்தில் வாழவேண்டும் என்ற கனவினை வளர்க்கும் நினைவுச்சின்னமாகவே நிமிர்ந்து நிற்கின்றது. இவ்வாறே ஈழத்தமிழருக்கும் இன்று முள்ளிவாய்க்கால்...

**02 முள்ளிவாய்க்கால் ஓர் தொடர்கதை**

**2.1 இறுதிப் போரின் சுருக்கம்**

வன்னிமண் வணங்காது நிமிர்ந்து நின்றது. இறுதிக்கட்டப் போர் ஈழமண்ணில் ஆரம்பமானது. நாங்கள் விரட்டப்பட்டோம் உலகம் அதை வேடிக்கை பார்த்தது. இறுதிப் போரில் நாங் கள் சந்தித்த சவால்கள் பல. பூனை குட்டி காவிய கதைபோல் ஆனது எம் மக்களின் நிலை. நாளுக்கு நாள் நாம் இடம் பெயர்ந்து நாடோடி வாழ்க்கைக்கு பழக்கப்பட்டோம். பல சந்தர்ப்பங்களில் வானமே எங்கள் கூரையாகி மரங்கள் குடைபிடிக்க வாழ்க்கை மர நிழலே தஞ்சமென்று தரிப்பிடம் கொண்டது. கண்ணீரோடு அலைந்த எம் மக்களை அன்று தண்ணீரும் விரட்டியது. அங்கே நாங்கள் இறுதிப்போரில் இயற்கையோடும் போராடினோம்.

குண்டுமழை பொழிந்து வன்னி மண் குருதியில் நனைந்தது. கண்ணீர் ஆறும் செந்நீர் ஆறும் கலந்து பெருக்கெடுத்தோடியது. நாளுக்கு நாள் பிள்ளைகளின் பிணங்கள் எங்கள் வீடுகளின் கதவுகளைத் தட்டியது. உணவு முதல் மருந்து வரை அத்தியாவசியப் பொருட்கள் அனைத்துமே அன்று எமக்குத் தடை செய்யப்பட்டன. வன்னிப்பெருநிலப் பரப்பு குறுநிலமாகி ஈற்றில் சுருண்டது முள்ளிவாய்க்கால் என்னும் புதிய மசாடாவினுள்.

**2.2 முள்ளிவாய்க்கால் ஓர் புதிய மசாடா**


வணங்காத இனமொன்று சுற்றிவளைக்கப்பட்டு முற்றுகையிடப்பட்டது முள்ளிவாய்க்கால் எனும் புதிய மசாடாவினுள். கொத்துக் கொத்தாய் வீழ்ந்த குண்டுகளால் செத்தச் செத்து மடிந்தனர் ஆயிரம் ஆயிரம் உறவுகள் அன்று. எம் மக்களுக்கோ பல நாள் பட்டினி குடலைப் பிடுங்கியெடுத்தது. தண்ணீரும் தட்டுப்பாடானது. செந்நீரோ வெள்ளமெனப் பெருக்கெடுத்து ஓடியது. நாடுகள் சேர்ந்து நடாத்திய இந்த இறுதி நாடகத்தில் ஒரு இனமே நரபலியானது. எங்கு பார்த்தாலும் உறவுகளின் உடலங்கள். பிணக்காடானது முள்ளிவாய்க்கால். எடுத்துப் புதைக்க எவருமில்லை எங்கள் உறவுகளின் உடலங்கள் நாய்களுக்கும், நரிகளுக்கும் உணவானது. 2009 மே 18 இல் யுத்தம் முடிந்து சத்தங்கள் மட்டுமே ஓய்ந்தன அந்தப் புதிய மசாடாவின் கண்ணீரும் காயங்களும் இன்னமும் காயவில்லை.

**முடிவுரை**

அன்று மசாடாவின் மதில்களை தகர்த்தெறிந்த உரோமையர்களால் யூதர்களின் மனவுறுதியைத் தகர்க்க முடியவில்லை. மசாடா உரோமையர்களுக்கு அவமானத்தின் அடையாளமானது. யூதர்களுக்கோ அது வீரத்தின் இருப்பிடமானது. மசாடாவில் யூதர்கள் வீழ்ந்தாலும் உரோமையர்களிடம் தோற்றுப்போகவில்லை என்பதே உண்மை.

எனவே மசாடா யூதர்களுக்கு அவர்களது வீரத்தையும் தன்மானத்தையும் நினைவுபடுத்து ஓர் நினைவுச்சின்னமானது. அதேவேளை, அவர்கள் தன்மானத்துடன் தனித்துவமாக வாழவேண்டும் என்ற கனவினை வளர்க்கும் ஓர் நிகழ்வாகவும் இருக்கின்றது. இன்று முள்ளிவாய்க்கால் எமக்கு அன்றைய மசாடாவின் ஓர் புதிய மொழி பெயர்ப்பே.

யுத்தம் என்பது இருதரப்பினருக்கிடையே நடைபெறும் பலப்பரீட்சை அல்ல. யுத்தத்திற்கும் ஓர் அறம் இருக்கின்றது. அந்த அறத்தின் வழி யிலே யுத்தம் வழிநடத்தப்படவேண்டும். அந்த அறத்தை மீறி நடக்கும் யுத்தம் எப்போதும் ஓர் அராஜகமாகவே கணிக்கப்படும். அறம் தோற்றுப்போகும் யுத்தங்கள் அனைத்தும் வெற்றிகளல்ல மாறாக அவை தோல்விகளே. அங்கே எஞ்சியிருப்பதெல்லாம் வெறும் மனிதப் பேரவலங்களே.



# எமக்குத் தரப்படுகின்ற காலத்தின் மேன்மை

உலகில் நாம் விரும்பும் அனைத்தையும் அடைய உதவும் முக்கியமான மூலப்பொருள் நேரம் என்பதுதான். காலையில் நாம் துயில் எழும்போது எங்களுடைய கையில் தரப்படும் இருபத்து நான்குமணி நேரத்திற்கும் சொந்தமாகி விடுகிறோம்.

ஆனாலும் எமது வாழ்வு பரபரப்பானதாக்வும், வேகமானதாகவும் மாறி விட்டது. எதையும் நேரத்துடன் முடிப்பது கடினமானதாக இருக்கின்றது. எதிலும் காலதாமதம் என்பது மிகச்சாதாரணமாகி விட்டது. அலுவலக ஊழியர்களோ, பாடசாலை மாணவர்களோ, பொதுக்கூட்டங்களுக்கும், விழாக்களுக்கும் வருகை தரும் முக்கிய பிரமுகர்களோ எவருமே காலதாமதத்திற்கு தங்களைப் பொறுப்பாக்கிக் கொள்வதில்லை. வாகனக் கோளாறு அல்லது போக்குவரத்து இடையூறு அல்லது உறவினர்கள் நண்பர்களின் குறுக்கீடு என ஏதோ ஒன்றைக் காரணமாக்கித் தமது தாமதத்தை நியாயப்படுத்தும் மனப்பாங்கும் நம்மிடம் மலிந்து விட்டது.

அறிவியலும், தொழிநுட்ப முன்னேற்றமும் நமக்குப் பல வசதி வாய்ப்புக்களைத் தந்திருந்தபோதிலும் தொலைக்காட்சி, தொலைபேசி, கணனி, அதிவேக வாகனங்கள் என தொடராக நீளும் நவீன சாதனங்களை முறையாகப் பயன்படுத்தி எமது நேரத்தை மிச்சப்படுத்துவதன் மூலம் ஆக்கபூர்வ பணிகளுக்கென எமது நேரத்தைச் செலவிடுவது மிக அரிதாகவுள்ளது. ஆனால் நாம் அதிகமாக ஊர் சுற்றித்திரிய வாகனத்தையும் நீண்ட நேரம் தேவையற்று உரையாட தொலைபேசியையும் பொழுதுபோக்கு சாதனமாக தொலைக்காட்சி, கணனி போன்றவற்றையும் பயன்படுத்துகின்றோம். இதனையும் விட காத்திருப்புக்காக நாம் செலவழிக்கும் நேரம் கொடியது. நேரத்தின் அருமை தெரியாமல் ஒருவரை சந்திக்க வருவதாய் சொல்லி வாக்கு கொடுத்துவிட்டு தாமதமாக வந்து அடுத்தவரின் காலத்தையும் சேர்த்து விரயம் செய்வது நம் பலரின் பழக்கமாகிவிட்டது.

பல சாதனைகளையும், வெற்றிகளையும் நிலைநாட்டிய தலைவர்களும், பெரியார்களும் நேரம் தவறாது செயற்பட்டதனால் தான் உயர்வடைந்தார்கள் என்றால் சாலப்பொருந்தும். காலத்தை நாம் மதித்தால் அது நம்மை உயர்த்தும்.

கால மேன்மை என்பது நாம் செய்யவேண்டிய செயற்பாடுகளை வரிசைப்படுத்தியபின் அவற்றில் உடனடியாக செய்யவேண்டியவற்றை வகைப்படுத்த வேண்டும். உணவு, உறக்கம் போன்றவற்றுக்குரிய நேரம் தவிர்ந்த ஏனைய நேரத்தைக் கணித்து செய்ய வேண்டிய கருமங்களை முறையாக செய்து முடிப்பதேயாகும்.

நமது பொறுப்புக்கள் அதிகமானவை. ஆனால் ஒரு நாளுக்குரிய நேரம் நிலையானது. எனவே நேரத்தை திட்டமிட்டு பொறுப்புக்களை நிறைவேற்றினால் நமது செயல்களுக்கு வெற்றி கிடைக்கும்.

ஒரு நிமிடநேர அளவீடு அனைவருக்கும் ஒன்றுதான். ஆனால் அதனை நாம் பயன்படுத்தும் நன்மைக்கு ஏற்ப அந்த நேரத்தின் மதிப்பு மாறுபடுகிறது. காலத்தோடு எதையும் செய்யும் இயல்பினை நாம் பெற்றிருந்தால் இந்த உலகையே நாம் ஆட்சிசெய்ய நினைத்தாலும் அது கைகூடும் என்கிறார் வள்ளுவர்.

கடந்த காலத்தில் நாம் சந்தித்த துன்ப துயரங்களை எண்ணி எண்ணி மனம் நொந்து நிகழ்கால நேரத்தை வீணாக்காமல், நேரத்தை எவ்வாறு பயன்படுத்தியிருக்கிறோம் என சுய மதிப்பீடு செய்ய வேண்டியது நமது வாழ்வில் மிக அவசியமாகும்.

நேரம் சரியில்லை என நாம் கூறாமல் நமக்குத் தரப்பட்ட நேரத்தைச் சரியாகப் பயன்படுத்துவோம். நேரத்தின் அருமையை உணர்ந்து செயற்படுவோம்.

"முன் தூங்கி முன் எழும்பு" என்னும் பொன்மொழி மிகவும் பிரபல்யமான சொற்களாக விளங்குகிறது. இதனை பெஞ்சமின் பிராங்கிளின் மொழிந்திருந்தார். இவரே மூக்குக்கண்ணாடியை கண்டறிந்தவர் ஆவார். முன்தூங்கி முன் எழுபவர்கள் சிறந்த உடல் நலமும் செல்வமும், ஞானமும் உள்ளவர்களாக விளங்குவார்கள். இவர்களுக்கு இதயநோயும், நீரிழிவும் வரவே வராது. இவர்களுக்கு இறப்பு வீதம் குறைவு என அண்மையான ஆய்வுகள் கூறுகின்றன.

அதாவது அதிகாலையில் எழுபவர்கள் வானம்பாடிகளாகவும், படுக்கையைவிட்டுதமதமாக எழுபவர்கள் ஆந்தைகளாகவும் உருவகப்படுத்தப்படுகின்றனர். வானம்பாடிகளாக இருப்பவர்கள் நல்ல உடல் நலம் உள்ளவராகவும் நல்ல தூக்கம் பெறுபவராகவும், உணவு உட்கொண்டு, உடற்பயிற்சி செய்பவராகவும் தம் வாழ்வை பழக்கிக் கொள்கின்றார்கள். ஆந்தைகளாக இருப்பவர்கள் உடல் நலத்திலும் உறக்கத்திலும் ஏனைய பழக்கங்களிலும் ஒழுங்காக இருப்பதில்லை.

எனவே நேரத்தை திட்டமிட்டு செயற்படுத்துங்கள். எந்த ஒரு மாற்றத்தையும் செய்வதற்கு கடினமாக ஆர்வமுடன் உழைக்க வேண்டும். மெல்ல மெல்ல உங்கள் நேர வழக்கத்தை மாற்றுங்கள். நீங்கள் நினைப்பதை விட சுறுசுறுப்பாக இயங்கும் மனிதர்களாக உங்களால் மாற முடியும்.

## இளையோர் காவியம் 07

உன் வாழ்க்கை
இருண்டுபோய் கிடப்பது
தெரியாது உனக்கு
அவ்வளவு தூரம் இருளை
வெளிச்சம் என்று நம்ப வைக்கிறது
நாடு

நீ வளர்க்கப்படுவதாக
அறுவடை செய்யப்படுகிறது
இளமை

கஞ்சா
கடத்தப்படுபவை மட்டுமல்ல
வழங்கப்படுபவையும் தான்

காற்று அடிக்கிற பக்கமெல்லாம் சாய்வது
உன்னுடைய வேலை அல்ல
மரங்களுடைய வேலை

உன் தலைபோனாலும்
விலைப்பட்டியல் போடக்கூடாது
வாழ்க்கைக்கு

இது ஆன்மீகம் அரசியலோடு
சம்பந்தமில்லை என்று ஒதுங்குவது
தப்பு

அநீதி
நடக்குதென்று தெரிந்து கொண்டும்
பிலாத்துவை போல கை கழுவக்கூடாது
நீ

நுகர்வு
கலாசாரம் வாழ்க்கை
வயலில் வீசப்பட்டிருக்கிற
தீக்குச்சி

எரிந்து முடிவதற்கு முன்
தீயணைப்புக்கு தேவைப்படுவது
விழிப்பு

நீ பள்ளிக்கூட படிப்பில்
பெயில் விட்டிருந்தாலும் கூட
பெயில் விட்டுவிடவே கூடாது
வாழ்க்கைப் படிப்பில்

உன் வாழ்நாளில்
சாதனை நாளாக இருக்கட்டும்
ஒருநாள்

பூமியில்
வாழ்க்கை நிரந்தரம் இல்லாவிட்டாலும்
சாதிக்க மனிதர்களுக்கு
வரலாறு நிரந்தரம்

உயிரோவியன்

## சிந்திக்க ஓர் சித்திரம்




## விளக்கை ஒளிரச்செய்வோம்...



ஒரு குருவானவர் சிறுவர்களின் மறைக்கல்வி வகுப்பறைக்குச் சென்று வேதாகம அறிவை பரீட்சிக்க முயற்சித்தார். முதலில் ஒரு மாணவியிடம் சென்ற குருவானவர் "நீ பைபிள் வாசிக்கின்றாயா? அதற்குள் என்ன இருக்கிறது என்று சொல்லு பார்ப்போம்" என்று கேட்டார். அதற்கு அந்த சிறுமி "நான் பைபிள் வாசிப்பதுண்டு அத்துடன் அதற்குள் பல விடயங்கள் அடங்கி இருக்கிறது" என்று பதில் சொன்னாள். குருவானவர் "சரி! அதற்குள் அடங்கியிருக்கும் விடயங்களைச் சொல்லு பார்ப்போம்" என்று கேட்டார். அச் சிறுமி "அதற்குள்ளே அம்மாவின் கேக் குறிப்பு, மின்சாரக் கட்டண பில், சமுர்த்திக் கூப்பன், அம்மா அப்பாவின் திருமண போட்டோ" என்பன அடங்கியிருக்கின்றன என்று சொன்னாள்.

- வேதாகமம் எமக்கு வழிகாட்டும் ஒளி விளக்கு இதனை மறந்துபோகாது அதன் புனிதத்தைப் பேணுவோம்.

"உம்முடைய வார்த்தை என் வாழ்வுக்குத் தீபமாய் என் பாதைக்கு வெளிச்சமாய் உள்ளது" (தி.பா)

# நாவற்குழி புனித அந்தோனியார் ஆலயத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

ஆன்மீகத் தேடல்களுக்கும், மனதை ஆறுதல்படுத்துவதற்கும் அடித்தளமாக இருப்பது ஆலயங்களாகும். இதனாலே தான் "கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என நம் முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஆலயங்கள் பொதுவாக நீண்ட வரலாற்றுப் பின்னணியைக்கொண்டவை. அவை கட்டி முடிக்கப்படும் வரை பல்வேறு சமூகப் பின்னணிகள் பின்னிப் பிணைந்திருக்கின்றன. இத்தகைய ஆலயங்கள் சமூகத்தை ஒன்றிணைப்பதுடன் நல்வழிகாட்டி, ஆன்மீக பலத்தை ஊட்டும் மையமாகவும் திகழ்கின்றன.

ஆலயங்களின் ஆரம்ப வளர்ச்சி, அச்சமூகத்தின் ஆன்மீக வளர்ச்சிக்கும் நம்பிக்கைக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. அந்த வகையில் நாவற்குழி புனித அந்தோனியார் ஆலயம் நம் மூதாதையர்களுடைய நம்பிக்கைக்கும், ஆன்மீக வளர்ச்சிக்கும் எடுத்துக்காட்டாகச் சிறந்து விளங்குகின்றது. நாட்டின் பல இடங்களில் இருந்து வந்திருந்த மக்களும், நாவற்குழியில் நிரந்தரமாக வாழ்ந்து வந்த மக்களுமாக கணிசமான கத்தோலிக்க மக்கள் இங்கு வாழ்ந்து வந்தனர். வேத போதக அந்தஸ்தில் இருந்த காரணத்தினாலும், நோவினா முறையில் இருந்த காரணத்தினாலும் ஆரம்ப காலங்களில் புனித அந்தோனியார் திருநாள் காலத்தில் பக்தர்கள் ஒன்று கூடி தங்கள் ஆன்மீக வாழ்க்கையைப் பாதுகாத்து வந்தனர்.

1892 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாவற்குழி கத்தோலிக்க கிறிஸ்தவர்களுக்கு என ஆலயம் அமைத்துக் கொள்ள நாவற்குழி கேரதீவு வீதியில் ஓர் காணி நிலம் யாழ் ஆயர் அவர்களுக்குக் கிடைக்கப் பெற்றது. கிடைத்த அந்த நிலத்தில் புனித அந்தோனியார் ஆலயம் அமைக்க தீர்மானம் எடுக்கப்பட்டது.

1908 ஆம் ஆண்டில் அத்திவாரம் இடப்பட்டு 1913 ஆம் ஆண்டில் அன்றைய யாழ் ஆயர் அதிவணக்கத்துக்குரிய



நாவற்குழியில் புதிதாக அமைக்கப்பட்ட புனித அந்தோனியார் ஆலயத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவையொட்டி (13.05.2013 - 13.05.2018) இக்கட்டுரை பிரசுரமாகின்றது.
ஆக்கம் - இ.இம்மானுவேல்

ஏ.டொன்டன்வில் அ.ம.தி. ஆண்டகை அவர்களால் ஆலயம் அபிஷேகம் பண்ணப்பட்டு வழிபாடுகளுக்கென ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பதிபக்தி - குருபக்தி - இறைபக்தி என முப்பெரும் ஆன்ம தேடல்களின் அடிப்படையில் ஆன்மீக வாழ்வுப்பாதை முன்னெடுக்கப்பட்டு வந்தது. ஒன்பது நோவினைகளும் அன்றிருந்த மக்களிடம் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. ஏழ்மையில் இருந்த கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களை தாய்த்திருச்சபையானது பொறுப்பெடுத்து பிள்ளைகளுக்கு கல்வியும் வேலைவாய்ப்பும் வழங்கி பாதுகாத்து வந்தது.

காலங்கள் கனிந்து அருட்பணிச்சபை, திருவுளச்சபை, அன்பியங்கள் முதலான பக்திச் சபைகள் ஆரம்பிக்கப்பட்டு அதன் வழியாக கத்தோலிக்க வழிபாடுகள் நடைபெறத் தொடங்கின.

1978 இல் அருட்பணி கருணாகரன் அடிகளார் சாவகச்சேரி லிகோரியார் ஆலயம், மட்டுவில் லூர்து அன்னை ஆலயம், நாவற்குழி புனித அற்புதமாதா ஆலயம், நாவற்குழி புனித அந்தோனியார் ஆலயம் ஆகிய நான்கு ஆலயங்களுக்கும் பங்குத் தந்தையாகப் பொறுப்பேற்று மக்களைப் பாதுகாத்து ஆன்மீக தேவைகளை விசாரித்து வழி நடத்தி வந்தார்.

திருப்பலிகள், திருநாட்கள் என எல்லா வழிபாடுகளிலும் மக்கள் ஒன்று கூடி இணைந்து ஒருமைப்பாட்டைப் பாதுகாத்து கத்தோலிக்க ஆன்மீக விசுவாசத்தில் வாழ்ந்து வந்தனர்.

தொடர்ச்சியாகப் பன்னிரண்டு ஆண்டுகள் அருட்பணி கருணாகரன் அடிகளார் பங்குத்தந்தையாக பணியாற்றியதைத் தொடர்ந்து 1990 ஆம் ஆண்டில் அருட்பணி லோறன்ஸ் அடிகளார் அவர்கள் எமது பங்கின் பங்குத்தந்தையாகப் பொறுப்பேற்று ஆற்றிய பணி எமது பங்கின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் மிகவும் உறுதுணையாக இருந்து, எமது பங்கினை ஒரு புதிய பரிமாணத்திற்கு இட்டுச் சென்றது.

2003 ஆம் ஆண்டில் அருட்பணி ம.வி.இ.இரவிச்சந்திரன் அடிகளார் எமது நாவற்குழி புனித அந்தோனியார் பங்கின் பங்குத்தந்தையாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். அவருடைய காலத்தில் எமது பங்கில் முன்னேற்றகரமான நிகழ்வுகள் நடந்தேறியதுடன், எமது மக்களின் ஆன்மீக விசுவாச வாழ்வு மேலும் ஊக்குவிக்கப்பட்டது.

காலங்கள் உருண்டோடின. 2011 ஆம் ஆண்டில் அருட்பணி ம.யேசுரட்ணம் அடிகளார் எமது பங்கின் பங்குத்தந்தையாக நியமனம் பெற்று வந்தார்கள். அவருடைய காலத்தில்தான் ஒரு புதிய ஆலயம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற எம் மக்களின் கனவு கனிந்து வந்தது.

அருட்பணி ம.வி.இ.இரவிச்சந்திரன் மற்றும் அருட்பணி ம.யேசுரட்ணம் ஆகியோரால் 2011 ஆம் ஆண்டு புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நடாத்தி வைக்கப்பட்டது.

புதிய ஆலயத்திற்கான அத்திவாரம் போடும் பணியும் 2011 இல் ஆரம்பிக்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 13 ஆம் திகதி, அப்போதைய யாழ் ஆயர் பேரருட்கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் எமது புதிய ஆலயம் அபிஷேகம் பண்ணி திறந்து வைக்கப்பட்டது.

தற்போது எமது பங்குத்தந்தையாக அருட்பணி. றெக்ஸ் சவுந்தரா அடிகள் பணியாற்றி வருகிறார்கள். எமது மக்கள் உலகப் போக்கிலேயே வாழ்ந்து விடாமல் இறைபக்தி, குடும்ப செபமாலை, ஆன்மீக வாழ்வு என்ற வழிகளில் எம் மக்கள் ஆன்மீக வாழ்வில் சிறந்து விளங்க பங்குத்தந்தை அவர்கள் எம்மை வழிநடத்தி வருகின்றார்.

# இளைஞனே உனக்கு ஓர் அழைப்பு

செ.யோசப் பாலா
உளசமூகச் சீராளன்

இளைஞனே! உனக்கு ஓர் அழைப்பு! இதில் சாதிக்க வேண்டியதும் சரித்திரம் எழுதவேண்டியதும் உனது பொறுப்பு. எத்தனையோ வசதி வாய்ப்புக்கள், நவீன ஊடகங்கள், போக்குவரத்து வசதிகள், பாதை செப்பனிட்டு பல்வேறு துறைசார் தேடல் நிறைந்த நேரத்தில் உனது பயணம் பற்றி சற்று சிந்திக்க அழைப்பு விடுக்கும் நேரம் இது.

எல்லா வசதி வாய்ப்புக்கள் இருந்தும் நேரமில்லை நேரமில்லை என்று அங்கலாய்ப்போர் அநேகர். ஆன்மீகவாதிகள், அரசியல்வாதிகள், சமூகத் தலைவர்கள் என தமக்குள் பலர் பெயர்பொறித்துக் கொண்டாலும் தினம் எத்தனை மணி நேரம் பொறுப்பேற்று பணிகளை நிறைவேற்றுகிறார்கள் என்பதே கேள்வியாக உள்ளது.

இந்நிலைமைகள் வாழும் சூழலில்தான் எத்தனை சமூகவிரோத செயல்கள், எத்தனை வீதி விபத்துக்கள், எத்தனை கோஷ்டி மோதல்கள், குடும்பப் பிறழ்வுகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள் நடைபெற்று வருகின்றன. இவற்றுக்கு மத்தியில் ஆலயங்கள் கோவில்கள், பள்ளிவாசல்கள், விகாரைகள் எங்கும் விழாக்கள், வழிபாடுகள், விருந்துகள், கேளிக்கைகள் நடைபெறுகின்றது.

இச்சூழலில் இன்றைய இளையோரின் வகிபாகம் என்ன? கிறிஸ்து "அவன்", "அவள்" என்று துணிந்து கூறும் உங்கள் கடமைகள் பொறுப்புக்கள் எவை? எதை ஏற்று செயற்பட விளைகிறேன்? எந்த அமைப்பில் எனது பிரதிநிதித்துவம் என்னால் வெளிப்படுத்தப்படுகிறது? முதிர்ச்சியடையும் இளமைப் பருவத்தில் எதை செயற்படுத்தும் பங்காளராக உள்ளேன்? எனது ஊரில் நான் வாழும் சூழலில் என்ன செயலால் எனது பணிகள் அடையாளப்படுத்தப்படுகிறது என்பதனை சுட்டிக்கூற முடியுமா? என சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இன்றைய நிலையில் இளையோரிடம் "எங்களை இணைப்பதில்லை", "எங்களோடு தொடர்புகொள்வதில்லை", "எங்களை வழிப்படுத்த யாருமில்லை" என்ற முனகல் ஒலி கேட்டு வருகின்றது.

மறுமுனையில் "யாரும் வருகிறார்கள் இல்லை", "பொறுப்பு எடுக்கிறார்கள் இல்லை", "அவர்கள் போக்கு வேறாக உள்ளது", "ஒருவரும் பொதுச் சேவையில் ஈடுபட விருப்பமில்லை" என்ற மனப் பதிவுகளுடன் இளையோரை எதிர்கொள்ள பொறுப்பேற்க பலர் தயங்குகிறார்கள்.

இயேசுவின் சீடர்களுக்கு எத்தகைய வசதிவாய்ப்புக்கள் இருந்தன? தலைமைக்குக் கட்டுப்பட்ட அழைப்பினை எவை தொடர வைத்தன? எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தலைவனின் முன்மாதிரிகையும், சீடத்துவத்தின் அர்ப்பணிப்பும், அமைச்சலும், நல்லுறவாடலும், அவர்களின் புனித வாழ்வுக்கு வழிகாட்டியாக அமைந்தது.

இன்று திருவிழாக்கள் ஏட்டிக்குப் போட்டியாக, அலங்கார விளக்குகளாக, அருளுரைகளாக, ஆன்மீகப் பயணங்களாக, பொழுதுபோக்கு மையங்களாக மாறிவிடுமோ என்ற ஐயம் ஏற்படுகிறது. இத்தனை விழாக்கள் நடைபெறும் ஊரில்தானே சமூகச் சீர்கேடுகளும் நிகழ்கின்றன. ஏன்? வழிபாடுகள் வாழ்வாகவில்லையா? இளையோர் இதிலிருந்து ஒதுங்கி வாழ்கிறார்களா? அல்லது கொடிகட்டவும், கோஷ்டி நிகழ்வு நடத்தவும் மட்டும் பயன்படும் போலியாக இளையோர் மாறிவிட்டனரா?

ஒரு கிராமத்தில் ஆலய திருவிழா நடைபெற்றால் அதனால் ஏற்படும் சமூக சமய மாற்றங்கள் என்ன? இதில் இளையோர் பங்கேற்கும் முன்மாதிரி செயல்களும் வாழ்வுக்கு அர்த்தமூட்டுகிறதா? இன்றைய இளையோர் மட்டத்தில் சிந்திக்க வைக்கும் சமூக சமய விழுமியங்கள் எதிர்காலத் தூரநோக்கின் பயணமாக அமையுமா? இளையோர் மட்டில் ஏற்படுகின்ற பொறுப்புமிக்க பங்களிப்புக்கள் சமூக சமய மாற்றத்தின் சக்தியாக்கப்படுகிறதா?

இளைஞனே! உன் அழைப்புக்கு விடை என்ன? உன் கடமைகள், பொறுப்புக்கள் சமூக மாற்றத்தின் சக்தியாக, முன்மாதிரியாக வெளிப்பட அழைப்பின் குரலுக்குச் செவிமடுக்கும் இளையோர் அணியாக, கிறிஸ்துவின் சாயலாக, புதிய தலைமுறைக்கு வழிகாட்டியாக வாழ வா! கிறிஸ்தவ தலைமையை ஏற்க வா! இளமைக்கு அர்த்தமூட்ட வா! இதுவே காலத்தின் அழைப்பு.

## காவலன் கலசம்

# தென்னாபிரிக்கா பயணம் சில மனப்பதிவுகள்....

அருட்பணி ம.வி.இ.இரவிச்சந்திரன்

*நிலைமாறுகால நீதியை நிலைநாட்டுவதற்கான ஏற்பாடுகளும் அவற்றின் இயங்குதிறன் தொடர்பான இன்றைய நிலையும் பற்றிய அறிதலுக்கான பயணம் ஒன்றை மேற்கொள்ள அண்மையில் ஒரு சந்தர்ப்பம் கிட்டியது. வவுனியாவில் தளமிட்டு இயங்கும் 'மாற்றம்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் பல்லின, பல்மத, சமூக செயற்பாட்டாளர்களின் குழுவொன்று இப்பயணத்தை மேற்கொண்டது. மொத்தமாக 16 பேரைக்கொண்ட குழுவில் இணைந்து கொள்ள எனக்கும் சந்தர்ப்பம் கிட்டியது. பயனுள்ள விதத்தில் அமைந்திருந்த இந்த பயணத்தில் கற்றுக்கொண்ட விடயங்களை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.*

### தென் ஆபிரிக்கா

ஐரோப்பிய குடியேற்றவாசிகளால் தனது அமைதியை இழந்த உலகில் பல பழமையான பண்பாடுகளுள் ஆபிரிக்க பண்பாடும் ஒன்று. முக்கியமாக ஒல்லாந்தர்களும், ஆங்கிலேயரும் தென் ஆபிரிக்காவிலே குடியேறினர். படிப்படியாக சுதேசிகளான கறுப்பினத்தாரை அடிமை கொண்டு பல்வேறு அடக்கு முறைகளிலும் வளச்சுரண்டல்களிலும் ஈடுபட்டனர். 1948 இல் பிரித்தானியர் நாட்டைவிட்டு வெளியேறிய போது 'சுதந்திர' தென் ஆபிரிக்காவை அங்கு குடியேறியிருந்த சிறுபான்மை வெள்ளையினத்தவரிடம் ஒப்படைத்து சென்றனர். இந்த வெள்ளையினத்தவர் 1950களில் அறிமுகம் செய்த நிற ஒடுக்கு முறையினால் கறுப்பின பெரும்பான்மையினர் மிகவும் துன்புற்றனர். இந்த ஒடுக்கு முறைக்கு எதிராகக் கறுப்பினத்தவர் மேற்கொண்ட தொடர்ச்சியான போராட்டம் 1994 வரை நீடித்தது. 1994 இல் பெரும்பான்மை கறுப்பினத்தவர் மீளவும் ஆட்சியை கைப்பற்றினர். நெல்சன்மண்டேலா போன்ற உயர்தலைவர்களினை



உருவாக்கிய இப்போராட்டம் கறுப்பினத்தவர்களுக்கு எதனைப் பெற்றுக்கொடுத்தது? ஒடுக்குமுறைக்கால குற்றங்கள் எவ்வாறு கையாளப்பட்டன? அவற்றிற்கும். இலங்கைக்குமுள்ள பொருத்தப்பாடுகள் எவை? என்பன இப் பயணத்தின் பயன்களாகும்.

### மோசமான ஒடுக்குமுறை

நிற ஒதுக்கு என்பது மிகவும் மோசமானதாகவும், ஒவ்வொரு கறுப்பினத்தவரையும் நேரடியாக பாதிப்பதாகவும் அமைந்திருப்பதை அவதானிக்க முடிந்தது. மனித நிலையில் இருந்து ஒட்டுமொத்த கறுப்பர்களையும் கீழிறக்கிய ஒடுக்குமுறையின் கூர்மையும் பொதுமையும் போராட்டத்தை தவிர்க்கவியலாததாகவும், மக்கள் மயப்பட்டதாகவும் மாற்றியிருந்தது.

### மக்கள் மயமான போராட்டம்

ஆரம்பத்திலிருந்தே நிற ஒதுக்குமுறைக்கு எதிரான போராட்டம் தன்னெழுச்சி தன்மை கொண்டதாகவும், பெருமளவில் மக்கள் திரண்டு பங்கெடுக்கும் தன்மை கொண்டதாகவும் அமைந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. கறுப்பின மக்களின் பண்பாட்டில் இயல்பாகவே காணப்படும் குழுமத்தன்மை இத்தகைய மக்கள் திரள் போராட்டத்துக்கு பெரிதும் உதவியுள்ளது.

### சிறந்த தலைமைகள்

மக்களை அணிதிரட்டும் ஆற்றல் கொண்ட ஜனவசிக தலைமைகள் உருவாகியிருந்தன. தூரநோக்கோடு நெகிழ்ச்சித்தன்மையை வெளிப்படுத்தும் தலைமைப் பண்பு காலத்தின் திரட்சியில் தமக்குக் கிடைத்த வாய்ப்பை கச்சிதமாக பற்றிக் கொள்ள அவர்களுக்கு உதவியுள்ளது. ஒழுங்கு முறைப்பட்ட ஆயுதப் போராட்டம் உருவாகாமல் இருந்ததும், தலைமை பெரும்பாலும் மென்போக்குக் கொண்ட அரசியல் தலைமையாக (ANC) காணப்பட்டதும் பேச்சு வார்த்தையில் விட்டுக் கொடுப்புக்களுடன் கூடிய வெற்றியை நோக்கி நடக்க உதவியுள்ளன.

### கனிந்து வந்த காலம்

உலக ஒழுங்கு இருதுருவ நிலையிலிருந்து ஒரு துருவமாக மாறிவந்த காலப்பகுதியில் உலக அபிப்பிரயாயத்தை தம்பால் ஈர்த்துக் கொள்ளும் அமெரிக்க ஐரோப்பிய தேவையின் பக்க விளைவும் கறுப்பினத்தவருக்கு ஜனநாயக உரிமைகளை வழங்க வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தியது.

### உலக அபிப்பிரயாயம்

முக்கிய போராட்ட இயக்கங்கள் தடைசெய்யப்பட்ட பின்னணியில் உலக நாடுகளுக்கு சிதறிச் சென்ற தலைமைகளின் கடும் முயற்சியின் விளைவும் கறுப்பின ஒடுக்குமுறைக்கெதிராக ஒரு உலக அபிப்பிராயத்தை ஏற்படுத்தியது. உலகமே தமது முகத்தில் காறித்துப்புவதாக ஒரு உணர்வை வெள்ளையின ஆட்சியாளர்கள் பெற்றுக் கொள்வதான சூழல் உருவானது.

மேற்சொல்லப்பட்ட பல்வேறு விடயங்களின் திரட்சி தென்னாபிரிக்காவில் கறுப்பினத்தவருக்கான அரசியல் உரிமையை மீட்டெடுக்கும் சூழலை ஏற்படுத்தின.

### கறுப்பின அரசும் நிலைமாறுகாலமும்

கறுப்பினத்தவரின் ஆட்சி நிலைநாட்டப்பட்டதன் பின் அவர்கள் கடந்த காலத்தோடு சமரசமாக மேற்கொண்ட முயற்சிகளில் TRC முக்கியமானது. 'மன்னிப்போம் மறக்கமாட்டோம்' என்கின்ற ஒரு நிலைப்பாட்டோடு இணக்கப்பாடு எட்டப்பட்ட ஒரு நாடாக தென்னாபிரிக்காவை கட்டியெழுப்ப முயற்சிகள் எடுக்கப்பட்டது.

ஆணைக்குழுவில் வந்து தமது பாதிப்புக்களை அறிக்கையிடுவோருக்கு இழப்பீடும், தமது குற்றங்களை ஏற்றுக்கொள்வோருக்கு பொது மன்னிப்பும் உறுதிப்படுத்தப்பட்டன. இரண்டாண்டுகளுக்கு நீடித்த இந்த ஆணைக்குழு பாதிப்புற்ற கணிசமானோர் இழப்பீட்டைப் பெற்றுக் கொள்ள வழி செய்தது. அயினும் குற்றமிழைத்தோர் மன்னிப்பு வேண்டியது குறைவாகவே காணப்படுகிறது. அவர்கள் பகிரங்க அறிக்கையும் இன்றி, குற்றவியல் விசாரணையும் இன்றி இலகுவாக தப்பித்துக் கொண்ட சூழல் காணப்படுகிறது.

ஆட்சிமாறி இருபது ஆண்டுகளுக்கு மேலான பின்பும் கறுப்பின மக்களின் வாழ்வில் பொருளாதார விடிவு ஏற்பட்டதாக தெரியவில்லை. நிலமும், சொத்தும் இன்னும் சிறுபான்மை வெள்ளையரிடமே காணப்படுகின்றன. இந்நிலையில் ஒடுக்குமுறையாளர்கள் அவர்களது நலன்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையிலேயே ஆட்சிமாற்றத்துக்கு உடன்பட்டுள்ளார்கள் என்பது தெளிவாகிறது. கறுப்பினத்தாரிடையே அதிருப்தி அதிகரித்து வருவதை உணர முடிகிறது.

நீண்டகால நோக்கில் கறுப்பினத்தாருக்கு சமூக பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த அரசு போதிய முயற்சிகளை மேற்கொள்ளாதவிடத்து முன்னுதாரணமான தேசம் என்பது கனவாகவே கலைந்து விடும் ஆபத்து உள்ளது.

### நினைவு கூரல்

'மன்னிப்போம் மறக்கமாட்டோம்' என்கின்ற அடிப்படையில் நினைவு கூரலுக்கான அமைவிடங்கள் பல்வேறு இடங்களிலும் பரவிக் கிடப்பதை அவதானிக்க முடிந்தது. வெள்ளையின ஒடுக்குமுறையின் கோர முகத்தையும் கறுப்பினத்தவர் பட்ட அவலங்களையும் பின்னாளில் அவர்களது எழுச்சியையும், பெருந்தன்மையையும் அவை மீள மீள வலியுறுத்தி நிற்கின்றன. காலாதிகாலத்துக்கு வெள்ளையின ஒடுக்குமுறையாளர்களுக்கு அவமானத்தையும், கறுப்பினத்தாருக்கு பெருமையையும் புகழையும் சேர்க்கும் வண்ணமாக இவை அமைக்கப்பட்டுள்ளன. ஒடுக்குமுறையாளருக்கு வழங்கப்பட்ட நிரந்தர தண்டனை போல் இவை தோன்றுகின்றன.

### இன்றைய நிலை

இன்றைய நிலை தென்னாபிரிக்க மக்களின் விடிவுக்கான போராட்டம் இன்றும் முற்றுப்பெறாததொன்றாக தொடர்கிறது. பெற்றுக்கொண்ட அரசியல் உரிமைகள் அவர்களுக்கு மனிதர் என்ற மாண்பை மீள வழங்கி வெள்ளையருக்கும் ஏனையோருக்கும் அவர்களை சமமானவர்களாக்கியுள்ளது. தமக்குத் தீங்கிழைத்தவருக்கு மன்னிப்பு வழங்க அவர்கள் எடுத்த முடிவு அவர்களை பெருமிதம் கொள்ள வைக்கிறது. ஆயினும் சமூக பொருளாதார அடைவு மட்டங்கள் எட்டப்படாமல் இருக்கின்ற நிலை அவர்களது சமத்துவத்துக்கான போராட்டம் இன்றும் தொடர வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது.

### அவர்களும் நாங்களும்

❖ அவர்களது போராட்டம் மக்கள் மயமானதாக இருந்தது. ஆயுதப்பாவனை குறைவாகவே இருந்தது. எங்களுடையது கடுமையான ஆயுதப்போராட்டமாக இருந்தது. மக்களின் நேரடி ஈடுபாடு குறைவாக இருந்தது.

❖ ஒடுக்குமுறையின் கோரமுகம் அங்கு வெளிப்படையானதாகவும், பொதுவானதாகவும், கூர்மையானதாகவும் காணப்பட்டது. இங்கு மறைமுகமானதாகவும் மெதுவானதாகவும் ஆனால் உறுதியானதாகவும் வெளிப்பட்டது.

❖ அங்கு தலைவர்கள் மக்களை அணி திரட்ட வல்லவர்களாக இருந்தார்கள். இங்கு தற்போதைய தலைமைகள் மக்களை அணிதிரட்டுவதில் எவ்வித அக்கறையுமற்று இருக்கிறார்கள்.

❖ காலத்திரட்சி அவர்களிடம் ஒப்படைத்த அந்தக்கணத்தை அவர்கள் கையகப்படுத்தி விட்டார்கள். நாங்கள் கைநழுவ விட்டுவிட்டோமா என்று எண்ணத் தோன்றுகிறது.

❖ அவர்கள் போராட்டத்துக்கு சார்பான சர்வதேச அபிப்பிராயம் மிகவும் பலமானதாக இருந்தது. நமது போராட்டம் பற்றி சர்வதேச அபிப்பிராயம் பலமானதாக உருவாக்கப்படவில்லை.

❖ பேச்சுவார்த்தைகளின் போது நிலம், சொத்துப் பகிர்வு போன்ற விடயங்களில் அதிக விட்டுக் கொடுப்பு செய்து விட்டார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. எமது அமைதி முயற்சிகளில் இத்தகைய சமரசங்களின் ஆபத்துப் பற்றி விழிப்பாக இருத்தல் அவசியம்.

❖ வெற்றியடைந்த நிலையில் குற்றமிழைத்தவர்களுக்கு மன்னிப்பு வழங்கும் சூழல் அவர்களுக்கு காணப்பட்டது. ஆனால் போர்க்குற்றம், இன அழிப்பு போன்றவற்றின் விசாரணைகளே இன்று சர்வதேசத்தில் எமது பிரச்சினையை உயிர்ப்பாக வைத்திருக்க துணை செய்கிறது.

❖ அவர்களிடம் சிறப்பான நினைவிடங்கள் உள்ளன. எம்மத்தியில் அவற்றை ஏற்படுத்த அதிகாரமற்ற நிலை காணப்படுகிறது. நினைவுகளை அழிக்க முழுமுயற்சி மேற்கொள்ளப்படுகிறது. பதிலிற்கு நினைவுகளை பேணுவதற்கான விழிப்புணர்வும் முயற்சியும் குன்றிக் காணப்படுகின்றது..

❖ ஒரு போராட்டம் எப்போதும் சமூக பொருளாதார விடுதலையோடு இணைந்த அரசியல் விடுதலைக்கானதாகவே இருக்கவேண்டும் என்பதும் எமக்குரிய இன்னுமொரு பாடமாகும்.

### நெல்சன் மண்டேலாவின் சிந்தனைகள்



◆ செய்து முடிக்கும் வரை செய்ய முடியாதது போல தான் இருக்கும்

◆ கோபம் விஷம் குடிப்பதைப் போன்றது. ஆனால் நம்பிக்கை உங்கள் எதிரிகளையும் அழிக்கும் வல்லமையுள்ளது.

◆ விழாமல் வாழ்ந்தோம் என்பதல்ல. விழும் ஒவ்வொரு முறையும் மீண்டும் எழுந்தோம் என்பதே வாழ்வின் பெருமை.

◆ காலத்தின் மதிப்புத் தெரிந்தால் உனக்கு வாழ்வின் மதிப்புத் தெரியும்

◆ கல்வியே உலகை மாற்றக்கூடிய சக்தி மிக்க ஆயுதம்

◆ புத்தக வாசிப்பிற்கு இடம்கொடுத்தால் போதும். சிறையும் சுதந்திரமான இடம்தான்.

◆ உயர்ந்த உள்ளங்களிலிருந்து தான் உயர்ந்த சிந்தனைகள் பிறக்கின்றன.

◆ நல்ல தலைமையும் நல்ல இதயமும் சிறப்பான இணை.

◆ வறுமை தொடரும் போது உண்மையான விடுதலை இருப்பதில்லை.

# காவலன் கலசம்




**முன்னுரை**

"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஔவை மூதாட்டி தந்த அமுதவாக்கு. அது சமய வேறுபாடின்றி எல்லா மக்களும் கடைப்பிடிக்கும் நல்லதொரு நடைமுறையுமாகும். மிகப் பெரும்பான்மையான ஊர்களின் மையமாக விளங்குபவை அவ்வூர்களின் ஆலயங்களே.

நம் மக்கள் அதிக ஆர்வத்துடனும் ஆடம்பரத்துடனும் பங்கேற்கும் மிகப் பெரிய நிகழ்வு அவரவர் ஊர்களில் கொண்டாடப்படும் ஆலயத் திருவிழாக்களே. இவ்வாறு ஊர்களுக்கு மட்டுமன்றி, மக்கள் வாழ்வுக்கும் மையமாக விளங்குபவை ஆலயங்களே.

**எதற்காக ஆலயம்?**

இந்தத் தனிச் சிறப்பு வாய்ந்த அற்புதமான ஆலயமும் இங்கு செயற்படுத்தப்படும் சமய செயற்பாடுகளும் எமது வழிபாட்டின் அதியுயர்ந்த நிலையை எடுத்துக்காட்டுகின்றன. இந்தச் சமய செயற்பாடுகள் எமது இறையியலின் மிக ஆழ்ந்த வெளிப்பாடுகளாக அமைகின்றன. எல்லா இடங்களிலுமுள்ள எமது மக்கள் அதை ஓர் அருஞ்செல்வமாக மதித்து, இறைவனுடைய ஆலயத்துக்குச் சென்று அங்கு கிடைக்கக்கூடிய ஆவியிலும் அருளிலும் பங்குபெற இன்னும் அதிக முயற்சி எடுப்பது மிகவும் விரும்பத்தக்கது.

உண்மையுடனும் விசுவாசத்துடனும் ஆலயம் செல்லும் ஒவ்வொருவரும் மென்மேலும் திருந்திய மனிதராக அங்கிருந்து வெளிவருகிறார் என நாம் நம்புகிறோம். எம் எல்லோருடைய வாழ்விலும் இடைவிடாத திருத்தமும் வளர்ச்சியும் தேவைப்படுகின்றன. சில வேளைகளில், உலகின் சத்தம் சந்தடிகளை விட்டு விலகி, இறைவனின் ஆலயத்தினுள் சென்று, தூய்மையும் அமைதியும் நிறைந்த சூழலில் அவரது பிரசன்னத்தை உணரவேண்டியது அவசியம்.

இவ்வாறு செய்வதன் மூலம் நாம் இன்னும் சிறந்த மக்களாக மாற முடியும். எம் நடுவில் பிரமாணிக்கமின்மை படிப்படியாகக் குறையும். எமது இல்லங்களில் இன்னும் அதிக அமைதியும் அன்பும் மகிழ்ச்சியும் நிலவும். பெற்றோர் பிள்ளைகளின் கவலையும் கண்ணீரும் குறையும். ஒருவரையொருவர் போற்றுவதும் மதிப்பதும் அதிகரிக்கும். ஆலயத்தில் நாம் செய்யும் நற்செயல்கள் அனைத்தும் நம்மை விண்ணகப் பாதையில் வழிநடத்துகின்றன.

**இறை பிரசன்னம்**

ஆலயத்தைப் புனிதமாக்குவதும் மேன்மைப்படுத்துவதுதம் இறை பிரசன்னம் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் பிரசன்னத்திற்கு ஒரு முன் நிகழ்வு. கடவுளின் பிரசன்னம் வாக்குத்தத்தத்தின் பெட்டியின் மேல் நிறைவாய் இருந்தது. இயேசுவின் பிரசன்னம் இந்தக் கூடார பிரசன்னத்தில் நீடிப்பாகவும் நிறைவாகவும் அமைகின்றது. இப்பிரசன்னம் இறைவார்த்தை, நற்கருணை என்னும் இரு அடையாளங்களால் செயற்படுகின்றது.

**இறைவார்த்தை**

"மறைநூல்கள் அனைத்தும் கடவுளின் தூண்டுதல் பெற்றுள்ளது" (2 திமொ. 3:16) இவ்வாறு இறைதூண்டு தல் பெற்ற வார்த்தை என்றென்றும் நிலைத்திருக்கும் வார்த்தை. (1 பேது 1:25) இத்தகைய வார்த்தைகள் வாழ்வு தரும் ஆவியைக் கொடுக்கின்றன. (யோவா. 6:63) எனவே, இவ்வார்த்தை தீயைப் போன்றதல்லவா? (எரே. 23:29) இத்தகைய வார்த்தைக்கு நாம் அமைந்த உள்ளத்தோடு செவிமடப்பது அவசியம். ஏனென்றால் அதை மீறிய எவரும் அதற்குக் கீழ்ப்படியாத எவரும் தகுந்த தண்டனை பெற்றனர். (எபி 22:1). எனவே, "இறைவார்த்தையைக் கேட்டு அதைக் கடைப்பிடிப்போர் இன்னும் அதிகம் பேறு பெற்றோர்" (லூக். 11:28) இறைவார்த்தையால் பண்படுத்தப்பட்ட உள்ளங்கள் நற்கருணையால் ஊட்டம் பெறுகின்றன.

**நற்கருணை உறவின் விருந்து**

நற்கருணை என்பது மனித உயிருக்கு உணவு. அதனை நாம் பொதுவாக விண்ணகவிருந்து, ஆன்மீக உணவு மட்டும் என்றே கருதுகின்றோம். ஆனால் யேசு உடலுக்கு உணவாகிய, உறவிற்கு உதவியாகிய, இறைவனது அருள்வளங்களின் அடையாளங்களாகிய அப்ப, இரசத்தை நற்கருணையில் நமக்குத் தருகிறார். எனவே இது முழு மனித வாழ்விற்குரிய உணவு.

நற்கருணையைக் கொண்டாடும் சமூகம் பட்டினி இல்லாத அதாவது அன்புப் பசி, அறிவுப் பசி, ஆன்மீகப் பசி அனைத்தும் நிறைவுற்று முழு மனித வாழ்வு வாழுகின்ற சமூகமாக மலர வேண்டும்.

இத்தகைய நிறைவாழ்விற்கு உறவுகள் இன்றியமையாதவை. உறவுகள் இன்றி உண்மையான மனித வாழ்வோ வளர்ச்சியோ இல்லை. இதனால் தான் நாம் உறவே மனிதம், உறவே புனிதம், உறவே உண்மைத் தெய்வம் என்கிறோம் ஆனால் இன்று பெரும்பாலான உறவுகள் போலியானவையாக, சுயநலம் நிறைந்தவையாக மாறிக்கொண்டிருக்கின்றன.

உறவை வளர்க்க உதவுவது விருந்து, இதனால் யேசு நற்கரணையை ஒவ்வொருவரும் தனித்தனியாக உண்ணும் உணவாக அல்லாமல், உறவின் சமூகமாக பலரும் இணைந்து உண்ணும் விருந்தாகவே தந்துள்ளார். எனவே இணைந்து விருந்துண்ணுதல் என்பது இணைந்து உயிர் வாழ்வதற்கு, உறவின் சமூக உருவாக்கத்திற்கு உதவியும் அதை உணர்த்தும் அடையாளமுமாகும். விருந்தில் பங்கேற்கும் அனைவரும் ஒருமனப்பட்டு வாழக் கடமைப்பட்டுள்ளோம்.

**நற்கருணைப் பிரசன்னம்**

கூடாரத்தைச் சுற்றிக் குழுமியிருந்த இஸ்ராயேல் மக்களைப் போன்று நாமும் நற்கரணையைச் சூழ்ந்திருக்க வேண்டும். அதேவேளை கூடாரத்தை விட்டு விலகி மலையிலே இருப்பதற்கு அழைக்கப்பட்ட மோசே போன்று ஒன்றாக இருக்கும் நிலையிலிருந்து விடுபட்டு தனியாக இயேசுவின் பிரசன்னத்திலே இருக்கவேண்டும். மோசே தனியாக மலையில் இருந்தபொழுது தான் அவரது முகம் ஒளிவீசிப் பிரகாசித்தது. இதே போன்று நற்கருணைப் பிரசன்னத்தில் தனிமையில் நேரத்தைச் செலவிடும் கிறிஸ்தவர்களின் வாழ்வு உருமாற்றம் பெறுகின்றது. ஒளி வீசுகின்றது.

நற்கருணைப் பிரசன்னத்தின் 3 அம்சங்களை நாம் ஒன்றிலிருந்து மற்றவற்றைப் பிரிக்கமுடியாது. அவை:

**நற்கருணைப் பலி**

**நற்கருணை உணவு**

**உருமாற்றம் தரும் நற்கருணைப் பிரசன்னம்**

இவை மூன்றும் சேர்ந்ததுதான் நற்கருணைப் பிரசன்னம். எனவே நாம் தனிப்பட்ட முறையிலே நற்கருணைப் பிரசன்னத்திலே இருப்பதற்குப் பழக வேண்டும்.

**தவறான புரிதல்களும் நடைமுறைகளும்**

இறைவனின் உடனிருப்பை உணர்ந்து வாழ உதவும் நினைவிடம் அல்லது அடையாளமே ஆலயம் என்பது நடைமுறை வாழ்வில் மறக்கப்படுகின்றது. இன்றைய சமூக, பொருளாதார, அரசியல் செயற்பாடுகளால் பாதிக்கப்படும் மக்கள் மீது அக்கறையோ சமூக மாற்ற முயற்சிகளில் ஈடுபாடோ இன்றி ஆலயத் திருவிழாக்களையும் வழிபாடுகளையும் ஆடம்பர, அலங்காரங்களுடன் முடித்துவிட்டு தங்கள் ஆன்மீகக் கடமைகள் முடிந்துவிட்டதெனச் செயற்படும் பல கிறிஸ்தவர்களும் உள்ளனர்.

**கிறிஸ்துவின் ஆவியார் குடிகொள்ளும் உயிருள்ள ஆலயங்கள்**

ஒவ்வொரு கிறிஸ்தவரும் கிறிஸ்தவ சமூகமும் உயிர்த்த யேசு வழியாக உடனிருக்கும் கடவுளின் உயிருள்ள ஆலயங்கள் என்னும் உண்மை கிறிஸ்தவ ஆன்மீகத்திற்கும் அறவாழ்விற்கும் அடிப்படையானது. தங்களிலும் தங்கள் நடுவிலும் உடனிருந்து உறவாடும் அந்த இறைவனுடன் ஒன்றித்து வாழ்வதே கிறிஸ்தவ ஆன்மீகம். ஒவ்வொரு மனிதரும் சமூகமும் மற்றவரை கடவுள் குடியிருக்கும் ஆலயம் என ஏற்று, மதித்து, அன்புப் பணி செய்வதும் சகோதரத்துவ நல்லுறவும் சமூக நீதியும் நிலவும் ஆலயமாக சமூகத்தை உருவாக்குவதுமே கிறிஸ்தவ அற வாழ்வு.

**நிறைவாக,**

ஆலயம் என்பது ஒரு வெறும் கட்டடம் அல்ல. மாறாக அது ஒரு சமயச் சின்னம். "கடவுள் நம்மோடு" என்னும் உண்மையை அது நினைவுறுத்துகின்றது. ஒவ்வொரு மனிதரும் சமூகமும், ஏன் இந்த அகிலமுமே கடவுளுடைய ஆலயங்கள் என்பது அது சொல்லும் முக்கிய செய்தியாகும். கடவுளுடைய ஆலயமாக வாழ்வது என்பது ஒவ்வொரு மனிதருக்கும் சமூகத்திற்கும் உரிய இயல்பு மட்டுமல்ல, விடுக்கப்பட்டுள்ள அழைப்பும் ஆகும். அதாவது இறைவனின் இன்றியமையாத பண்புகளாகிய அன்பு, தூய்மை, உண்மை, நீதி, பரிவிரக்கம், சகோதரத்துவம் என்பவற்றை வாழ்வாக்கி அவர்கள் மனிதநேய சமூகங்களாக வளரவேண்டும் அப்போது தான் அவை உண்மையாகவும் முழுமையாகவும் இறைவனின் உயிருள்ள ஆலயங்கள் ஆகின்றன. இதற்கு உதவுவதே கற்களால் மனிதர் கட்டும் ஆலயங்கள். அவற்றில் நடத்தப்படும் வழிபாடுகள், செபதபங்கள், பக்தி முயற்சிகள், திருவிழாக்கள் ஆகியவற்றின் நோக்கம். இல்லையெனில் யேசு கூறியதுபோல் அவை இடிக்கப்பட வேண்டியவையே.

**அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகம்**

---

# நிஜத்தில் வாழ்ந்து நிம்மதி அடைவோம்

"இறந்த காலத்தைப் பற்றிக் கவலைப்படாதே
அது செத்துவிட்டது.
எதிர்காலத்தை எண்ணிக் கலங்காதே
அது உனது கைகளில் இல்லை.
நிகழ்காலம் தான் உயிருள்ள காலம்
இங்கே தான் உன் கவனம் இருக்கவேண்டும்"

என்பது வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஓர் தத்துவமொழியாகும். ஆனால் எமது வாழ்வு இதற்கு எதிர்மாறாகவே ஓடிக்கொண்டிருக்கின்றது. இறந்த காலத்தைப் பற்றிய கவலையும், எதிர்காலத்தைப் பற்றிய ஏக்கமும் எமது வாழ்க்கையில் முதன்மை பெறுவதால் நிகழ்காலத்தைப் பற்றிய உணர்வில்லாமல் நாம் செத்தவர்களாகவும் கலக்கம் உள்ளவர்களாகவும் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இதனால் தான் எம்மால் இறை விசுவாசத்துடன் கூடிய இறை வாழ்வையும், செயற்கரிய செயல்களையும், சாதனைகளையும் நிகழ்த்தமுடியாமல் இருக்கின்றது. இத்தகைய சிறைக்குள் இருந்து நாம் வெளிவரவேண்டுமானால் நிகழ்காலத்தில் எமது வாழ்வை உயிர்ப்புடைய வாழ்வாக மாற்றிக் கொள்ள அந்தக் காலத்தில் மாத்திரம், அந்தக் கணத்தில் மாத்திரம் எமது முழுக் கவனமும் படிந்திருக்கவேண்டும்.

பாதையைப் பார்த்து பயணத்தை தொடர்வதற்குப் பதில் வானத்தைப் பார்த்து வழிதவறுகின்றவர்களாக எம் வாழ்க்கை அசைந்து செல்கிறது. இந்த நாள், இந்த நிமிடம், இந்த வினாடி இவை மட்டுமே நிஜமானவை. பூக்களின் சிரிப்பில் இறைவன் இருப்பதும், ஆலயத்தில் ஆண்டவன் இருப்பதும், ஆன்மா தூய ஆவியின் ஆலயம் என்பதும், தன்னை அறிதலே சிறந்த ஆன்மீகம் என்பதும், ஆண்டவனைத் தேடுவதே ஞானத்தின் தொடக்கம் என்பதும் நிஜமானவை.

இவற்றை மறந்து பயணிக்கும் எம் வாழ்க்கை பாறையில் மோதுண்டு சிதறும் கப்பலுக்குச் சமமானது. **உன்னோடு இருக்கிறேன்** என்றவரை மனதில் இருத்தி செயற்படுவோம். நம்மை விட்டு நீங்காத இறைவன் நிஜத்தில் வாழ நமக்குத் துணை செய்வார். அத்தகைய துணையாக தூய ஆவியார் எமக்கு அருளப்பட்டுள்ளார். **"எங்கே நிம்மதி எங்கே நிம்மதி அங்கே எனக்கோர் இடம்வேண்டும்"** என மனிதன் இன்று அங்கலாய்த்துத் திரிகின்றான். இதற்குக் காரணம் அவன் நிஜத்தில் இறைபராமரிப்பில், தூய ஆவியின் வழிநடத்தலில் பாதம் பதிக்காமல் இருப்பதேயாகும்.

இன்று பல மனிதர்களைப் பார்த்து "எப்படி இருக்கிறீர்கள்?" என்று கேட்டால் "ஏதோ இருக்கிறோம்" என்ற பதில் தான் வருகின்றது. இத்தனைக்கும் ஐந்து விரல்களிலும் மோதிரம் போட்டிருப்பார்கள். கார் வைத்திருப்பார்கள். உயர்தர வாழ்க்கை வாழ்வார்கள். நல்ல தொழில் இருக்கும். நல்ல குடும்பம் அமைந்திருக்கும் ஆனால் "ஏதோ இருக்கிறோம்" என்பார்கள். என்ன காரணம்? இறைபராமரிப்புடன் கூடிய நிஜத்தில் வாழாத அலைபாயும் மனதுடன் அலைவதுதான் காரணம். எனவே நிஜத்தில் வாழ்ந்து நிம்மதி அடைவோம்.

**இ.இ.வசீகரன் (ஆசிரியர்)**

## இல்லறம் காப்போம்



# வாழ்க்கைத் துணையை தெரிவு செய்யும் போது கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்

உறவுகளின் தாயகம் குடும்பம். உறவுதான் உலகில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் அர்த்தம் தருகிறது. மனிதன் இயல்பிலேயே கூடிவாழும் பண்புடையவர். அவருக்கு வெற்றி, மகிழ்ச்சி, நிறைவு எல்லாவற்றுக்குமே அடிப்படையாக அமைவது உறவுகள்தான். உலகமே இன்று இந்தக் குடும்பத்தின் சிறப்பை உணர்ந்திருக்கின்றது. குடும்பம் அன்பை வளர்க்கும் ஆரம்பப் பள்ளியாகும்.

திருமணம், குடும்ப வாழ்வு இறைவனின் திட்டமாகும். எனவே ஆண்டவருடைய வார்த்தையில் திருமணத்தைப் பற்றி கூறப்பட்டிருக்கின்ற விடயங்களை ஆழமாக சிந்தித்து தியானிக்கவேண்டும். இறைவார்த்தையில் பிரமாணிக்கத்தை, அர்ப்பணத்தைப் பற்றி மிகத் தெளிவாக கூறப்பட்டுள்ளது. வாழ்நாள் முழுவதும் திருமண அன்பு நிலைத்திருக்க பிரமாணிக்கம் மிகமுக்கியமாகும். திருமணம் ஒரு உடன் படிக்கை என்பதை ஆழமாக உணர்ந்து புரிந்து முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளவேண்டும். ஒரு வீட்டைக் கட்டும் பொழுது நாங்கள் எவ்வாறு சிந்தித்து திட்டமிட்டு செயற்படுகிறோமோ அதேபோல குடும்ப வாழ்க்கைக்குள் நுழைய முன் ஆழமாக சிந்தித்து தியானித்து, திட்டமிட்டு, ஆயத்தப்படுத்த வேண்டும். அடுத்தபடியாக பெற்றோருடைய ஆசீர்வாதம் மிகவும் முக்கியமாகும். பெற்றோருடைய அனுமதியோடு அவர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெற்று இவ்வாழ்நாள் பயணத்தை ஆரம்பிக்க வேண்டும்.

திருமண உறவுக்கு துணையை துணைவியை தேர்ந்தெடுக்கும் முன்பு முக்கியமாக பெண் வீட்டாரும் ஆண் வீட்டாரும் கவனிக்க வேண்டியது என்ன? இருவருக்கும் பொருத்தம் உள்ளதா என்பதை சரியாய் கணிக்க வேண்டும். அடிப்படையில் பொருத்தம் இல்லாத இருவர் திருமண உறவில் சேர்ந்தால் இது வெகுகாலம் நீடிக்க இயலாது.

சமய நம்பிக்கைகளும் சடங்குகளும் மனதை ஆழமாகப் பாதிப்பவை என்பதால் ஆணும் பெண்ணும் ஒரே சமயத்தைச் சார்ந்திருப்பது நல்லது. மற்ற பொருத்தங்கள் எல்லாம் இருந்து சமயம் மட்டும் வேறு என்றால் இருவரின் அன்பும் இந்த வேற்றுமையை வெல்ல முடியும் என்பதற்கு நிறைய எடுத்துக்காட்டுக்கள் உள்ளன. ஒரே சமயத்தைச் சார்ந்தோரின் அன்றாட வாழ்வில் ஏற்படாத உரசல்கள், எதிர்மறை உணர்வுகள் இவர்களின் வாழ்வில் தொடர்ந்து ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன. அவற்றைச் சமாளிக்க இருவரும் பழகவேண்டும். சாதியினால் வேறுபட்டோர் திருமணம் செய்து கொண்டால் திருமணத்திற்கு பிறகு நிறைய பிரச்சினைகள் ஏற்படும் என்பது வெறும் கற்பனை. கலப்புத் திருமணம் செய்து கொண்டு மிகுந்த அன்போடு இல்லறம் நடத்துவோர் பலர் உள்ளனர். சாதி என்பது இன்று எந்த ஆதாரமுமின்றி செயற்கைத்தனமாக மனிதர்களை வெவ்வேறு குழுக்களாகப் பிரிக்கும் சதிதான். பாரம்பரியம், பழங்காலம் என்பதை மட்டுமே ஆதாரமாக கொண்டு தகுதியின்றி உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற எண்ணத்தில் நட்பு, பதவி, ஆதரவு, வாக்குகள், உதவிகளைதேடும் ஒருதந்திர சதியாகும்.

படிப்பிலும் பெரும் பாகுபாடுகள் இல்லாது ஓரளவு ஒத்த படிப்பு இருந்தால் அதுவும் திருமண உறவு நிலைக்க உதவும். ஒரே துறையில் படித்து ஒரே துறையில் பணியாற்றும் தம்பதியினர் மற்றவரின் சிரமங்கள், சவால்களைப் புரிந்துகொள்வது எளிதாகிறது. படிப்பில் பெரும் வேறுபாடுகள் இருந்தாலும் அதையும் மேற்கொண்டு வெற்றிபெற்ற திருமணங்கள் உள்ளன. இப்போது பெண்களும் எல்லாத் துறைகளிலும் கல்வி கற்று பணியாற்றுவது அதிகரித்து வருவதால் படிப்பில் பெரும் இடைவெளி இனி ஒரு பிரச்சினையாக இருக்கப்போவதில்லை.

வயதில் பெரும் இடைவெளி இருப்பது திருமண உறவுக்கு உகந்ததல்ல. பாலுறவு, குழந்தைப்பேறு, பிள்ளை வளர்ப்பு, பணி ஓய்வு, முதுமை என்று பல கட்டங்களில் பிரச்சினைகள் எழும் அபாயம் இருக்கிறது. வயதில் பெரும் வேறுபாடு உள்ளவர்களைத் திருமணம் செய்துகொள்ள நிர்பந்திப்பது வயதில் இளையோருக்குச் செய்யும் அநீதியே. ஆணும் பெண்ணும் ஒத்த வயதினராகவோ அல்லது ஒன்றிரண்டு கூடப்போனால் மூன்று நான்கு வயது வித்தியாசம் உள்ளவர்களாக இருப்பதே நல்லது. இதில் உள்ள பிரச்சினைகளை நன்கு சிந்தித்து, புரிந்து கொண்டு ஏற்றுக் கொண்டால் இது திருமண உறவுக்குத் தடையாக இருக்கவேண்டியதில்லை. ஆணை விட பெண் ஒன்றிரண்டு மூத்தவள் என்றால் எக்குறைவுமின்றி இல்லறம் நடத்துவோரை இன்று கூடக் காணலாம். நன்கு சிந்தித்து புரிந்து கொண்டு ஏற்றுக் கொண்டால் பிரச்சினைகள் தோன்ற வாய்ப்பில்லை.

திருமண உறவு நிலைத்து வெற்றி பெறுவதில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வாழ்வின் பொருத்தம், மனப் பொருத்தம் சிறப்பாக அமைய வேண்டும். குறிப்பாக வாழ்வின் மதிப்பீடுகள், எதிர்பார்ப்புக்கள், விழுமியங்கள், உணர்வுகள், பழக்கவழக்கங்களில் பொருத்தம் இருப்பது அவசியம். இந்த மனப்பொருத்தம் சிறிதும் இல்லாமல் திருமணம் செய்துகொள்வோருக்கு அன்றாடம் ஏற்படும் கோபமும், கவலையும் மனஉளைச்சலும் அதிகமாக இருக்கும் என்பதனால் இவர்களின் திருமண உறவுமண முறிவில் முடிந்து தோற்றுப் போகும் அபாயம் உள்ளது. மனப்பொருத்தம் உள்ளோரின் பழக்கங்கள் நல்லபண்புகள் சரியான கண்ணோட்டங்களினால் தோன்றி நல்லவையாய் அமைந்து இருவருக்கும் மகிழ்ச்சிதரும்.

மனப்பொருத்தத்தை கணிப்பது எளிதல்ல. அவசரப்பட்டுச் செய்கிற திருமணங்களில் இதை கணிக்க வாய்ப்பே இல்லை. ஆண், பெண்ணின் மதிப்பீடுகள், எதிர்கால இலக்குகள், குடும்பப் பின்னணி, திருமணம் பற்றிய புரிந்துணர்வுசொல், செயல், பழக்கவழக்கங்கள் இவற்றை கவனமாகப் பார்த்துத்தான் மனப்பொருத்தம் கணிக்க முடியும். இறைவனுக்கு என்றும் முதலிடம் கொடுத்து நல்ல ஆன்மீகப் பயிற்சிகளைப் பெற்று நல்ல குடும்ப வாழ்வை கட்டியெழுப்ப உறுதிகொண்டு பொறுப்பை ஏற்று இறைவழியில் பயணிக்க ஏற்ற துணையைத் தெரிவு செய்து நிறைந்த கனிதருகின்ற குடும்பங்களை கட்டியெழுப்ப முனைய வேண்டும்.

**அருட்பணி சிங்கராயர் எர்வின் (CMF)**

# பிள்ளைகள் நல்ல பிள்ளைகளாக



பிள்ளைகள் நல்ல பிள்ளைகளாக உருவாக்கப்படுவதே இன்றைய காலத்தின் தேவையாகும். நல்ல குடும்பம், நல்ல சமூகம், நல்ல சூழல் நல்ல பிள்ளைகளையே தோற்றுவிக்கும் என்பது வெளிப்படை. அன்புள்ள கணவனும் அன்புள்ள மனைவியுமாக வாழ்பவர்கள் பொறுப்புள்ள பெற்றோராகத் திகழ்வார்கள். பெற்றோர் பிள்ளைகளுக்கு ஆற்றக்கூடிய பெரிய தொண்டு அவர்கள் அன்புள்ள கணவனும் அன்புள்ள மனைவியுமாக வாழ்வதேயாகும்.

"இன்றைய காலப் பிள்ளைகளைக் கட்டுப்படுத்துவதோ, திருத்துவதோ பெரும் கஸ்டமாக உள்ளது. அந்தக் காலத்திலென்றால் அம்மா கீறிய கோட்டைத் தாண்டவே மாட்டோம். இன்றோ பிள்ளைகளைப் பார்த்து, 'இதைச்செய்' என்றால் அதைச் செய்வார்கள். 'அங்கு போகாதீர்கள்' என்றால், 'அது உங்களுக்கு விளங்காது. வீணாகக் குழப்பாதீர்கள்' என்று பிள்ளைகளை அலட்சியப்படுத்துவார்கள். எந்தக் காலத்திலும் பிள்ளைகள் பெற்றோருக்குப் பணிந்து வாழவேண்டும். அதேவேளை பிள்ளைகளின் நியாயமான எதிர்பார்ப்புகளை நிறைவேற்றப் பின்வாங்கக் கூடாது.

**பிள்ளைகளைத் திருத்தும் பொழுது பெற்றோர் கவனிக்க வேண்டியவை:**

1. பிள்ளைகள் தவறு செய்யும் பொழுது, 'நீ எப்போதும் இப்படித் தான். நீ ஓர் உதவாக்கரை' என்று எரிந்து விழாதீர்கள்.
2. பிள்ளைகள் ஐந்து வயதுக்குக் குறை வாயுள்ளபொழுது அவர்களை அடித்து, வெருட்டி, பயமுறுத்திக் கண்டிக்காதீர்கள்.
3. பிள்ளைகள் முன்னால் நேர்மையாகவும் நாணயமாகவும் நடந்துகொள்ளுங்கள்.
4. பிள்ளைகள் சிறப்பாகச் செயற்படும் பொழுது பாராட்டி உற்சாகப்படுத்துங்கள்.
5. பிள்ளைகள் வயதானபின்னர் அவர்கள் சுயமாகச் சிந்தித்துத் தீர்மானம் எடுக்க வாய்ப்பு வழங்குங்கள்.
6. பிள்ளைகள் கேள்வி கேட்கும்பொழுது அலட்சியப்படுத்தாது. அவர்களது கண்களை உற்று நோக்கிய வண்ணம் பதில் அளியுங்கள்.
7. பிள்ளைகளைத் திருத்தும்பொழுது கரிசனையோடு நடந்துகொள்ளுங்கள்.
8. பிள்ளைகள் தமது நியாயமான தேவைகளை நிறைவுசெய்ய வாய்ப்பளியுங்கள்.
9. பிள்ளைகள் சிறுசிறு காரியங்களிற் கூட விசுவாசமுள்ளவர்களாய் நடந்து கொள்வதற்கு ஊக்கமளியுங்கள்.
10. பிள்ளைகள் இயல்பாகவே நல்லவர்கள் என்பதை ஏற்றுக்கொண்டு புரிந்து அவர்களோடு செயற்படுங்கள்.

உங்கள் பிள்ளைகளின் ஆளுமை உருவாக்கம் அவர்கள் வாழும் சூழலிலேயே பெரிதும் தங்கியுள்ளது. பின்வரும் கூற்றுக்களைக் கவனியுங்கள்:

1. குற்றம் கண்டு பிடிக்கும் சூழலில் வாழ்பவர் குறைகூறக் கற்றுக்கொள்வார்.
2. கோழைகள் மத்தியில் வாழ்பவர் சவாலை ஏற்றுக்கொள்ளத் தயங்குவார்.
3. அங்கலாய்ப்பான சூழலில் வாழ்பவர் அடிக்கடி தளம்பலுறுவார்.
4. அதிக பாதுகாப்பில் வாழ்பவர் பயத்தின் மறுவடிவமாவார்.
5. அடிக்கடி நகைப்பிற்குள்ளாக்கப்படுபவர் வெட்கத்திற்கு ஆளாவார்.
6. அவனை அவனாக, அவளை அவளாக ஏற்றுக்கொள்ளும் சமூகத்தில் வாழ்பவர் அன்பில் வளருவார்.
7. உற்சாகமூட்டும் சூழலில் வாழ்பவர் நம்பிக்கையின் சுடராய் பிரகாசிப்பார்.
8. சகிப்புத்தன்மை கொண்ட கூட்டத்தில் வாழ்பவர் பொறுமையின் இலக்கண மாகத் திகழ்வார்.
9. சமத்துவ சமூக அமைப்பில் சஞ்சரிப்பவர் சமூக நீதியின் உறைவிடமாகத் திகழ்வார்.

இருபத்தெட்டு வயது வாலிபனும் இருபத்திநான்கு வயது யுவதியும் காதல் வாழ்வின் நான்காண்டு இறுதியில் பெற்றோரினால் பலவந்தமாகப் பிரிவுக்கு ஆளானார்கள். நான்கு வருடங்களாக இரகசியமான முறையில் காதலை அனுமதித்த பெற்றோர் பெரும் பணத்தோடு பலர் பெண் கேட்க வந்ததும் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்கின்றார்கள். உயிருக்கு உயிராக அன்பு செய்து வந்த தாய் மிரட்டுகின்றார்.

"நீ உன் காதலியைக் கைவிட்டுவிடு. கை நிறையப் பணத்துடனும் கழுத்து நிறைய நகையுடனும் வந்துபோகும் பெண்களில் ஒருத்தியைத் தேர்ந்தெடு. நீ வசதியோடு வாழ்வதையே நான் விரும்புகின்றேன். இல்லையேல் என்னை நீ பிணமாகப் பார்ப்பாய்."

இன்று எத்தனையோ இளசுகள் தாம் விரும்பியபடி தாம் விரும்பிய வாழ்க்கைத் துணைவரைத் தேர்ந்தெடுக்கமுடியாமல் பல்வேறு உபாதைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே ஒரு வழித் தொடர்பு இருப்பின் அதனை மாற்றியமைப்பதே அவசியமானது. இருசாராரும் ஒவ்வொரு பிரச்சினைக்கும் இரு பக்கங்கள் உள என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். கட்டாயப்படுத்தல்களும் கருணையில்லா மிரட்டல்களும் காட்டுமிராண்டித்தனமான வெளிக்காட்டல்களேயாகும். சுதந்திரமான சூழலில், ஜனநாயக முறையில் பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்டு, சுமூகமான தீர்வினை எய்துதல் ஆளை ஆள் நம்பி உணர்வூட்டம் பெறும் நிலையிலேயே சாத்தியமாகும்.

**பெற்றோரே கவனியுங்கள்:**

- உங்கள் குழந்தைகளுடன் அன்புடன் பேசுங்கள். உங்கள் கண்கள் அவர்களை நோக்கியே இருக்கட்டும்.
- உங்கள் குழந்தைகள் அமைதியாகவும் பரபரப்பில்லாமலும் இருக்கப் பயிற்றுவியுங்கள்.
- உங்கள் குழந்தைகளிடமிருந்து அளவுக்கு அதிகமாக எதிர்பாராதீர்கள்.
- உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் பாரபட்சபோக்கினைக் கை விட்டு விடுங்கள்.
- உங்கள் குழந்தைகள் கேட்பதெல்லாம் கொடுக்கவேண்டும் என்று எண்ணாதீர்கள்.

அதேவேளை பிள்ளைகள் தமது பெற்றோர் சார்பாக அன்பையும் மரியாதையையும் வெளிக்காட்டவேண்டும். கூரையில் ஏறிய பின்னர் ஏணியை உதைத்துவிடும் மனோநிலையை வயோதிபப் பெற்றோர் வருத்துமுற்றதும் அவர்களைக் கவனிக்காது உதாசீப்படுத்துவது வெளிக்காட்டுகின்றது. அவர்களை வேலைக்காரராக, அடிமைகளாக நடாத்துவது ஈனமான செயலேயாகும். மேலும், பிள்ளைகள் தம் மத்தியில் சகோதரத்துவ அன்பை வளர்த்துக் கொள்ளவேண்டும். ஏனைய சகபாடிகளோடும் அன்பாக நடந்துகொள்ள வேண்டும்.

**அருட்கலாநிதி வின்சன்ட் பற்றிக் (அமதி)**

# நூறாவது பிறந்த தினத்தில் நினைவுகூர்ந்து செபிக்கின்றோம்



## மலர் ஞானப்பிரகாசம்

*(30-05.1918 - 30.05.2018)*

இறைவாழ்விலும் இல்லற வாழ்விலும்
மிகுந்த கனிகொடுத்த அன்னையாக
ஏழு பிள்ளைகளை ஈன்றெடுத்து
ஏற்றமுடன் உழைத்ததால்
ஆன்மீகம் அறிவியல் என
அருட்செல்வம் பொருட்செல்வம்
நிறைவாக நாம் பெற்றோம்.
யாழ் ஆயராக யஸ்ரின் ஆண்டகை
திருப்பொழிவு பெற்றிட
உரமிட்ட பெருமையும் உமதன்றோ
நூறாவது பிறந்த தினத்தில்
உயிர்ப்பும் உயிரும் நானே என்ற
ஆண்டவர் இயேசுவின் நிழலில்
எம் தந்தையுடன் இன்புற்றிருக்க
பிள்ளைகள் நாம் செபிக்கின்றோம்.

*நித்தமும் நினைவுடன்*

*பிள்ளைகள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்*
*சகோதரிகள், சகோதரன்*

பேரருட்கலாநிதி யஸ்ரின்
ஞானப்பிரகாசம்
யாழ் ஆயர் (மகன்)

# முதல்நன்மை ஞாபகார்த்த சான்றிதழ்




புனித வளன்
கத்தோலிக்க
அச்சகத்தில்
பெற்றுக்கொள்ளலாம்.
ஒன்றின் விலை
ரூபா 20/=
மட்டுமே

# 4ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 08 • 00 • 1945

விண்ணுலகில் 31 • 05 • 2014



அமரர்

## றெஜினா நீக்கிலாப்பிள்ளை

AD46

" இதோ உம்மை பெயரிட்டு நாமே அழைத்தோம்
ஆகவே நீ நமக்கே சொந்தம் "
(எசாயா 43:01)

புன்னகையானது உன் முகம் அம்மா
புண்படுத்தாதது உன் மனம் அம்மா
பாசமானது உன் கரங்கள் அம்மா
பாத்திருக்க பிரிந்து சென்றாயோ அம்மா
நேசமாகப் பழகுவாயே
நினைத்துக் கொண்டிருக்கின்றோம் அம்மா
உன் நீங்காத நினைவுகளை
நிந்திய இறைவனோடு சங்கமமாக - உனக்காக
செபிப்பின்றோம் எப்போதும்

தகவல்
குடும்பத்தினர்

அன்புடன் : N.அஜந்தா A.C

## திருத்தந்தை ஆறாம் பவுல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜொவான்னி பத்திஸ்தா மொந்தினி என்ற இயற்பெயரைக் கொண்ட அருளாளர் திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்கள் வட இத்தாலியின் கொன்சேசியோவில் 1897 ஆம் ஆண்டு பிறந்தார். 1963 ஆம் ஆண்டு ஜூன் 21 ஆம் திகதியன்று பாப்பிறைப் பணியைத் தொடங்கி, 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6 ஆம் திகதி இறைபதமடைந்தார்.

மறைசாட்சியான சான் சால்தோர் பேராயர் ஆஸ்கார் ரொமேரோ அவர்கள் மத்திய அமெரிக்க நாடான எல்சால்வதோர் நாட்டின் Ciudad Barriosy இல் 1917ம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் திகதி பிறந்தார். 1980 ஆம் ஆண்டு மார்ச் 24 ஆம் திகதி திருப்பலி நிறைவேற்றிக் கொண்டிருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டார்.

மறைமாவட்ட அருட்பணியாளரான அருளாளர் பிரான்செஸ்கோ ஸ்பினெல்லி (Francesco Spine-lli) அவர்கள் திவ்விய நற்கருணை ஆராதனை அருட்சகோதரிகள் சபையை நிறுவியவர்.

அருளாளர் வின்சென்சோ ரொமானோ (Vincenzo Romano – 1751-1831) அவர்கள் இத்தாலியின் நேப்பிள்ஸ் பகுதியைச் சேர்ந்த மறைமாவட்ட அருட்பணியாளராவார்.

அருளாளர் மரிய கத்தரீனா காஸ்பர் (Maria Caterina Kasper) அவர்கள் இயேசு கிறிஸ்துவின் ஏழைச் சகோதரிகள் சபையை நிறுவியவர்.

அருளாளர் இயேசுவின் தெரசின் நசரியா இஞ்ஞாசியா (Nazaria Ignazia di Santa Teresa di Gesù) அவர்கள் திருஅவையின் திருச்சிலுவை மறைபோதக சபையைத் தோற்றுவித்தவராவார்.

## குருத்துவம், திருமணம் கொடையும் மறைபொருளும் நூல் வெளியீட்டு விழா

அருட்பணி தேவரட்ணம் செல்வரட்ணம் அடிகளாரின் **குருத்துவம், திருமணம் கொடையும் மறைபொருளும்** நூல் வெளியீட்டு விழா 28.05. 2018 திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபர் அருட்கலாநிதி த.ஜெ.கிருபாகரன் அடிகளார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்குயாழ் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை முதன்மை விருந்தினராக கலந்து கொள்வார்.

நூலுக்கான வெளியீட்டுரையை யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளாரும் ஆய்வுரையை புனித யோசவ்வாஸ் இறையியல் கல்லூரி இயக்குநர் அருட்பணி ம.வி.இ. இரவிச்சந்திரன் அடிகளாரும் நிகழ்த்தவுள்ளனர்.

**பாதுகாவலன் வாசகர்களே!**

பங்குகளில் நேரடியாகவும் மற்றும் தபால் மூலமும் பாதுகாவலன் பத்திரிகையை பெறுபவர்கள் அதற்குரிய சந்தாப் பணத்தை விரைவாகச் செலுத்தி பத்திரிகையின் வளர்ச்சிக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். - நிர்வாகம்

# பத்தாவது ஆண்டு நிறைவு

மண்ணில் 23 • 02 • 1943

விண்ணில் 19 • 06 • 2008



அமரர்

## மாற்கு யாக்கோப்பு (ஜேக்கப்)


AD/47

**இளைப்பாறிய இ.போ.ச.சாரதி**

" தந்தையே நீர் என்னிடம் ஒப்படைத்தவர்கள்
என் மாட்சியைக் காணுமாறு அவர்களும்
நான் இருக்கும் இடத்திலேயே என்னோடு
இருக்க வேண்டும் என விரும்புகிறேன்"
(யோவான் 17:24)

நிரந்தர முகவரி:
கிளாலி, எழுதுமட்டுவாள்
தற்காலிக முகவரி:
கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

உம் நினைவினில் வாழும்
மனைவி, திருமதி ஜே.சிசிலியம்மா
அருட்சகோதரி : சிறிய புஸ்பம் (அ.கா)
அன்ரன் (ஜேர்மனி)
மேரி கலிஸ்ரா உதயதாசன்
அருட்சகோரி டிலாந்தி (அ.கா)
மரிஸ்ரெலாஜோயல்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்



இளையோர் ஆண்டை முன்னிட்டு உரும்பிராய் பங்கு புனித மிக்கேல் ஆலய இளையோர் ஒன்றியதினால் ஏற்பாடு செயப்பட்ட விளையாட்டு போட்டி ஆலய முன்றலில் 13.05.2018 அன்று பங்கு தந்தை அருட்பணி பத்திநாதர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றிய மற்றும் சமூக தொடர்பாடல் ஆணைக்குழு இயக்குநர் அருட்பணி அ.அன்ரன் ஸரீபன் அடிகளார் கலந்து சிறப்பித்தார்.

## பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா

பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா ஆனி மாதம் 1ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

04.06.2018 தொடக்கம் 13.06.2018 வரை நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5.00 மணிக்கு இடம்பெறும். ஆனி மாதம் 12ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4..45 மணிக்கு நற்கருணைவிழாவும், 13 ஆம் திகதி புனிதரின் திருவிழாவன்று முதல் திருப்பலி காலை 5.15 மணிக்கும், திருவிழாத் திருப்பலி காலை 6.30 மணிக்கும் ஒப்புக்கொடுக்கப்படும். அன்று மாலை புனிதரின் திருச்சொரூபப் பவனி மாலை 4.00 மணிக்கு நடைபெறும்.



அரியாலை புனித யூதாததேயு ஆலய இளையோர் ஒன்றியத்தின் ஒன்றுகூடல் பங்கு தந்தை அருட்பணி J.J.மவுலிஸ் அடிகளாரின் தலைமையில் 13.05.2018 அன்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலய இளையோர் ஒன்றியத்திலிருந்து 15 இளையோரும், புனித யூதாததேயு ஆலய இளையோர் ஒன்றியதிலிருந்து 15 இளையோரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றிய மற்றும் சமூக தொடர்பாடல் ஆணைக்குழு இயக்குநர் அருட்பணி அ.அன்ரன் ஸ்ரீபன் அடிகளாரும் கலந்து சிறபித்தார்.

## ஆயர் தின திருப்பலிகள்

எமது மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களின் பெயர் கொண்ட திருநாளாக 01.06.2018 மலர்கின்றது.

இத்திருநாளை முன்னிட்டு 01.06.2018 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் நன்றித் திருப்பலியில் கலந்து கொண்டு ஆயரின் பணிக்காகவும் நல்வாழ்வுக்காகவும் இறை ஆசீர் வேண்டி நிற்க திருநிலையினர், பொதுநிலையினர் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

மாணவர்கள் காலை 8.30 மணிக்கு யாழ் புனித மரியன்னை பேராலயத்திற்கு சமூகம் அளிக்க வேண்டப்படுவதுடன், பாடசாலை மாணவர்களில் ஒருவர் ஆயரை வரவேற்கும் ஆரம்பப் பவனியில் தங்கள் பாடசாலைக் கொடியுடன் கலந்து கொள்ளுமாறும் யாழ் நகரிற்கு தூரத்தில் இருக்கும் பாடசாலைகள் தங்கள் வசதிக்கேற்ப ஒழுங்கினை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

முல்லைத்தீவு மறைக் கோட்டத்தில் 05.06.2018 செவ்வாய்க்கிழமை ஆயர் தின திருப்பலி புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆயைத்தில் காலை 9.00 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும்.

யாழ். மறை மாவட்ட மறைக்கல்வி நடுநிலைய இயக்குநர் A.F.பெனட் அடிகளாரின் தலைமையில் யாழ் மறை மாவட்ட மறைக்கல்வி நடுநிலையமும், கத்தோலிக்க ஆசிரியர் சங்கமும் இணைந்து ஆயர்தின விழாவுக்கான ஏற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## புனித சவேரியார் உயர் குருமடத்தில் ஆங்கில தின விழா



புனித சவேரியார் உயர் குருமடத்தின் கருதினால் ஜோன் ஹென்றி நியூமன் ஆங்கில மன்றத்தின் ஆங்கில தின விழா மே மாதம் 10ம் திகதி சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மொழிகள் மற்றும் ஆங்கில மொழித்துறையின் தலைவர் கலாநிதி அமிர்தாஞ்சலி சிவபாலன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

குருமட அதிபர் அருட்பணி T.J.கிருபாகரன் மற்றும் மன்றக் காப்பாளர் அருட்பணி A.ஜேம்ஸ்நாதன் ஆகியோரின் வழிகாட்டலில் அருட்சகோதரர்கள் இந்நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தியிருந்தனர்.

ஆங்கில தின விழாவின் சிறப்பு நிகழ்வுகளாக "Creation vs Creation" என்னும் இயற்கை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் அபிநய நாடகமும், நாடக ஆசிரியர் அன்ரன் செக்கோவால் எழுதப்பட்ட (Mime) 'The Anniversary' நகைச்சுவை நாடகமும் மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இது நாம் தியாகங்கள்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குளிர்காய்கின்ற சுயநலங்களை கைவிட்டு, உயிரோடு வாழும் நாம் தியாகங்கள் செய்யும் காலம் இது என்பதை உணர வேண்டுமென்று அழைப்புவிடுத்தார்.

கொடூரமான முறையில் தமது வாழ்வை அர்ப்பணித்தவர்களின் தியாகங்களை இன்று பலர் தமது சுயநலன்களுக்காகப் பயன்படுத்த முற்படும் துர்ப்பாக்கிய நிலையைக் கண்டித்த குருமுதல்வர், அவர்களின் தியாகங்கள் பலன் கொடுக்க வேண்டுமென்றால் நாம் இன்று பல தியாகங்களைச் செய்ய முன்வரவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

இதய சுத்தியோடு செய்யப்படும் ஒவ்வொரு தியாகமும் நிச்சயம் பலன்கொடுக்கும் என்பதை நிவைூட்டிய அவர், எல்லாம் வீணாகிவிட்டதே என்ற சிலரின் எண்ணங்கள் தவறானவை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

பழைய ஏற்பாட்டில் இறைவன் மோசேயை மோவாபு நாடு வரை அழைத்துச்சென்று தூரத்தில் உள்ள கானான் தேசத்தைக் காட்டி மோசேயிடம் நீ அங்கு செல்லமாட்டாய் என்று கூறியதையும், மோசே மோவாபு நாட்டிலேயே இறந்து அடக்கம் செய்யப்பட்டதையும், இஸ்ராயேல் மக்கள் கானான் நாட்டை சென்றடைந்ததையும் எடுத்துக்காட்டி, முள்ளிவாய்கால் வரை வந்த எத்தனையோ பேர் தூரத்தில் கண்ட தமிழ் மக்களின் விடுதலை தேசத்தை நாம் எமது தியாக வாழ்வினால் சென்றடையவேண்டும் என்றும் எடுத்தியம்பினார்.

இயேசுவின் வாழ்விலும் கல்வாரி மலையோடு எல்லாம் முடிந்துவிட்டது என்று பலர் எண்ணியதுபோன்று முள்ளிவாய்காலோடு எல்லாம் முடிந்து விட்டது என்ற எண்ணம் தவறானது என்பதை சுட்டிக்காட்டிய குருமுதல்வர் விடியலுக்காக நாம் அனைவரும் நம்பிக்கையோடு முன்னேறவேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார்.

## மாணவர்கள் மத்தியில் மறையறிவை மேம்படுத்த வேண்டும்

யாழ் மறைமாவட்ட குருமுதல்வர்



யாழ் மறைக்கல்வி நடுநிலையத்தால் 12.05.2018 அன்று நடத்தப்பட்ட திருவிவிலிய அறிவுப் போட்டி மற்றும் திருவிவிலிய பேச்சுப் போட்டி என்பவற்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் பங்குகளில் மறைக்கல்வி மாணவர்களின் திருவிவிலிய அறிவை வளர்க்கும் முகமாக மறைக்கல்வி நடு நிலையத்தால் வருடாந்தம் நடாத்தப்பட்டுவரும் இப்போட்டிகள் மூலம் மாணவர்கள் மத்தியில் மறையறிவை மேம்படுத்தவேண்டும் என தெரிவித்தார்.

யாழ் மறைக்கல்வி நடுநிலைய இயக்குநர் அருட்பணி A.F.பெனட் அடிகளார் இப்போட்டிகளில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து நின்றதுடன் இப்போட்டிகளை தங்களது பங்கில் விசேட கவனத்துடன் முன்னெடுத்து நடாத்திய பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், மறையாசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோருக்கும் அனுசரணை வழங்குகின்ற கிறிஸ்தவ விவகார அமைச்சுக்கும் தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

இப்போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றுதலை மேன்மேலும் ஊக்குவித்து மாணவர்கள் மத்தியில் திருவிவிலிய அறிவை மேம்படுத்த அனைவரும் உதவவேண்டுமெனவும் இயக்குநர் தந்தை கேட்டுக்கொண்டார்.

## துயர் பகிர்கின்றோம்

அருட்பணி. ம.றெக்ஸ் சவுந்தரா அடிகளாரின் அன்புத் தந்தை **சூசைப்பிள்ளை மனுவேற்பிள்ளை** அவர்கள் 20.05.2018 அன்று இறைபதம் அடைந்தார். அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.

- பாதுகாவலன் குடும்பம்

### செபமாலை மாதா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டி மறைமாவட்டத்தில் உள்ள செபமாலை மாதா துறவற உயர் பயிற்சி நிலையத்தின் அதிபராகவும், மாகாணத் தலைவரின் ஆலோசகராகவும் பணியாற்றிய இவர் நீர்கொழும்பில் அமைந்துள்ள செபமாலை ராஜினி செவன மடத்தின் அதிபராகவும் பணியாற்றினார்.

உரோமாபுரியில் உள்ள புனித அக்குவைனஸ் பல்கலைக் கழகத்தில் ஆன்மீக இறையியலில் முதுமாணி பட்டம் பெற்றுக் கொண்ட இவர் 2012- 2018 ஆண்டு வரை செபமாலை மாதா துறவற சபையின் உயர் தலைவரின் முதல் ஆலோசகராகவும் பணியாற்றினார்.

அடிகளார் மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த திரு திருமதி செல்லத்துரை சந்தானமேரி தம்பதியினரின் மகனாவார். அடிகளாரின் பணி சிறக்க பாதுகாவலன் செபத்துடன் வாழ்த்தி மகிழ்கின்றது.

## யாழ் மறைமாவட்ட திருவிவிலிய அறிவுத் தேர்வில் வெற்றி பெற்ற பங்குகள் விபரம் - 2018

| நிலைகள் | பிரிவு I | பிரிவு II | பிரிவு III | பிரிவு IV | பிரிவு V |
|---|---|---|---|---|---|
| 1ம் இடம் | பாண்டியன்தாழ்வு | பருத்தித்துறை | மல்லாவி | புங்குடுதீவு | கூழாமுறிப்பு |
| 2ம் இடம் | குளமங்கால் | புதுக்குடியிருப்பு | புங்குடுதீவு | உருத்திரபுரம் | குருநகர் |
| 3ம் இடம் | ஆனைக்கோட்டை | நெடுந்தீவு | அச்சுவேலி | பலாலி | பருத்தித்துறை |

## பேச்சுப் போட்டி முடிவுகள் – 2018

| தமிழ்மொழி மூலம் கீழ்ப்பிரிவு | பங்கு | நிலை | ஆங்கில மொழி மூலம் கீழ்ப்பிரிவு | பங்கு | நிலை |
|---|---|---|---|---|---|
| ஜெகதாஸ் சிமித் | மணல்காடு | 1ம் இடம் | கிறிஸ்ஷானி கொன்சன்ரைன் லூட்ஸ் | குருநகர் | 1ம் இடம் |
| போல் ஜஸ்ரஸ் சதேஸ்குமார் ஷியான் | பாண்டியன்தாழ்வு | 2ம் இடம் | சுஜித்ரா அருள்ஞானசுந்தர் | பாசையூர் | 2ம் இடம் |
| சி.கனிஸ்ரா | புங்குடுதீவு | 3ம் இடம் | யோதீபா றொபேட் கனிசியஸ் | பாசையூர் | 3ம் இடம் |
| **மேல் பிரிவு** | | | **மேல்பிரிவு** | | |
| எட்வின்ராசா அஜித்தா | மணல்காடு | 1ம் இடம் | A.ஆன்கொலன்சியா | மானிப்பாய் | 1ம் இடம் |
| கி.ஜீன் ஜென்சியா | பண்டத்தரிப்பு | 2ம் இடம் | J.மேரி ஆஷா | மானிப்பாய் | 2ம் இடம் |
| ஜோர்ச் சைமன் யூடிற் லக்ஷனா | கொய்யாத்தோட்டம் | 3ம் இடம் | அ.லக்ஷிகா | சில்லாலை | 3ம் இடம் |

இப் பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2018 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது